குல தெய்வங்களின் அருளால்
நமது எதிர்கால சந்ததியினர்

வழி தவறாமல்
நம் இனத்தோடு இணைந்து

கொங்கு வேளாளர்களின் பண்பாடுகளைக் காத்து,
சடங்கு முறைகளை முறையாகப் பேணி

நிலையுயர்த்துவோம் என
உறுதி பூணுவோம்.



வாழ்க வளமுடன்!



உ
ஓம்
குலதெய்வம் துணை.



திருச்சிற்றம்பலம்

**ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.**

திருச்சிற்றம்பலம்

**வெளியீடு**
அகில இலங்கை கொங்கு வேளாளர் ஒன்றியம்
(சடங்குகள் பொதுவாக்கல்)
65, டன்பார் வீதி, ஹட்டன்,
இலங்கை.

| | | | |
|---|---|---|---|
| 11 | பூவாணிய நாடு | - | ஓமலூர், தர்மபுரி |
| 12 | அரைய நாடு | - | ஈரோடு, நாமக்கல் |
| 13 | ஒடுவங்க நாடு | - | கோபி வட்டம் |
| 14 | வடகரை நாடு | - | பவானி வட்டம் |
| 15 | கிழங்கு நாடு | - | கரூர், குளித்தலை |
| 16 | நல்லுருக்கா நாடு | - | உடுமலை வட்டம் |
| 17 | வாழவந்தி நாடு | - | நாமக்கல் வட்டம் |
| 18 | அண்ட நாடு | - | பழனி வட்டம் |
| 19 | வேங்கால நாடு | - | கரூர் கிழக்கு |
| 20 | காவழக்கா நாடு | - | பொள்ளாச்சி |
| 21 | ஆனைமலை நாடு | - | பொள்ளாச்சி மேற்கு |
| 22 | இராசிபுர நாடு | - | சேலம், ராசிபுரம், கொல்லிமலை |
| 23 | காஞ்சிக்கோவில் நாடு | - | கோபி, பவானி |
| 24 | குறும்பு நாடு | - | ஈரோடு மேல்பாகம் |

## கொங்கு நாட்டின் 16 மலைகள்

| | | |
|---|---|---|
| 01 | ஓதியமலை, குருந்தமலை | அவினாசி |
| 02 | மருதமலை, ரத்தினகிரி | கோவை |
| 03 | ஆனைமலை, பொன்மலை | பொள்ளாச்சி |
| 04 | திருமூர்த்திமலை | உடுமலை |
| 05 | அழகுமலை, குமாரமலை | பல்லடம் |
| 06 | சிவன்மலை, ஊதியூர்மலை | தாராபுரம் |
| 07 | சென்னிமலை, பெருமாள்மலை | ஈரோடு |
| 08 | தவளகிரி, குன்னத்தூர் | கோபி |
| 09 | மாதேகவரன்மலை | கொள்ளேகால் |
| 10 | பாலமலை, ஊரட்சிமலை | பவானி |
| 11 | சுங்ககிரி, மோரூர்மலை, திருச்செங்கோடுமலை | திருச்செங்கோடு |
| 12 | கொங்கனமலை | இராசிபுரம் |
| 13 | ஏர்காடு, சேரர் அரையம் | சேலம் |
| 14 | கொல்லிமலை, கபிலர்மலை, நைனாமலை | நாமக்கல் |
| 15 | புகழிமலை, தான்தோன்றிமலை, வெண்ணெய்மலை | கரூர் |
| 16 | பழனிமலை, ஐவர்மலை | பழனி |



## மலரின் உள்ளே.........................


| விடயம் | பக்கம் |
|---|---|
| தொகுப்பு நூலாக்கக் குழு விபரம் | 05 |
| முக்கிய வேண்டுகோள் | 06 |
| தலைவர் உள்ளத்திலிருந்து | 07 |
| இணைப்பாளர்களின் எண்ணத்திலிருந்து | 09,11 |
| **சடங்கு முறைகள்** | |
| திருமண சடங்குகள் | |
| ☆ நிச்சயதார்த்தம் | 12 |
| ☆ வீட்டில் முகூர்த்தக்கால் நடல் | 12 |
| ☆ மங்கல நீராட்டல் / நலுங்கு விருந்து | 13 |
| ☆ திருமண நாளன்று வீட்டிலிருந்து புறப்படல் | 13 |
| ☆ பரிசம் (மண்டபத்தில்) | 14 |
| ☆ மணப்பந்தல் நிகழ்வுகள் | 14 |
| ☆ வெளி நிகழ்வுகள் | 17 |
| ☆ பொது விடயங்கள் | 18 |
| அமங்கல சடங்குகள் | |
| ☆ முதல் சடங்கு | 19 |
| ☆ நீர்மாலை | 19 |
| ☆ எண்ணெய் அரப்பு | 19 |
| ☆ நீரூற்றல் | 19 |
| ☆ குளிப்பாட்டுதல் | 20 |
| ☆ சிதைக்கு சூடம் காட்டுதல் | 20 |
| ☆ கோடி எடுத்தல் | 20 |
| ☆ நெய்ப்பந்தம் | 20 |

| | |
|---|---|
| 61 | சாத்தண்ட |
| 62 | சிலம்பன் |
| 63 | சுரபி |
| 64 | சூரியன் |
| 65 | சூலன் |
| 66 | செம்மன் |
| 67 | செம்பூத்தன் |
| 68 | செங்கண்ணன் |
| 69 | செல்வன் |
| 70 | செவ்வாயர் |
| 71 | செங்கனி |
| 72 | செவ்வந்தி |
| 73 | செங்குன்னி |
| 74 | செல்லன் |
| 75 | சேரன் |
| 76 | சேடன் |
| 77 | சேரலன் |
| 78 | சேகர் |
| 79 | சேவழன் |
| 80 | சோழன் |
| 81 | சோதி |
| 82 | சோமன் |
| 83 | தனவந்தன் |
| 84 | தனஞ்செயன் |
| 85 | தக்கவர் |
| 86 | தமிஞ்சி |
| 87 | துந்துமன் |
| 88 | தூரன் |
| 89 | தேவேந்திரன் |
| 90 | தேமான் |
| 91 | தோடை |
| 92 | பண்ணை |
| 93 | பனங்காடை |
| 94 | பதரியர் |
| 95 | பயிரன் |

| | |
|---|---|
| 96 | பதுமன் |
| 97 | பனையன் |
| 98 | பனுமன் |
| 99 | படுகுனி |
| 100 | பதரி |
| 101 | பவளன் |
| 102 | பனை |
| 103 | பரமன் |
| 104 | பஞ்சன் |
| 105 | பாண்டியன் |
| 106 | பாம்பன் |
| 107 | பாவலன் |
| 108 | பாலியன் |
| 109 | பில்லன் |
| 110 | பிறழாந்தை |
| 111 | பிரமன் |
| 112 | புத்தன் |
| 113 | புன்னை |
| 114 | பூசன் |
| 115 | பூந்தந்தை |
| 116 | பூந்தன் |
| 117 | பூந்தாரன் |
| 118 | பூதியன் |
| 119 | பூச்சந்தி |
| 120 | பெரியன் |
| 121 | பெருங்குடி |
| 122 | பொன்னர் |
| 123 | பொடியன் |
| 124 | பொருளந்தை |
| 125 | பைதரி |
| 126 | நந்தர் |
| 127 | நாரை |
| 128 | நீலன் |
| 129 | நீருன்னியர் |
| 130 | நீருகை |

| | |
|---|---|
| 131 | நெய்தலி |
| 132 | நேரியன் |
| 133 | மணியன் |
| 134 | மயிலர் |
| 135 | மழஅழகர் |
| 136 | மாழுவன் |
| 137 | மாகுடம் |
| 138 | மாடை |
| 139 | மாதுரி |
| 140 | மாதங்கன் |
| 141 | மாயவர் |
| 142 | மீனவன் |
| 143 | முத்தன் |
| 144 | முவர் |
| 145 | முனையன் |
| 146 | முக்கண்ணன் |
| 147 | முழுக்காரன் |
| 148 | மூலன் |
| 149 | மேதி |
| 150 | மொயம்பன் |
| 151 | வண்ணக்கர் |
| 152 | வரிவிழி |
| 153 | வாச்சர் |
| 154 | வாணர் |
| 155 | விரிவுளன் |
| 156 | விரதர் |
| 157 | விலோசனன் |
| 158 | விழியன்/விளியன் |
| 159 | வில்லி |
| 160 | விளையன் |
| 161 | வீரன் |
| 162 | வெண்டுவன் |
| 163 | வெளியன்/விழியன் |
| 164 | வெண்ணெய் |
| 165 | வெள்ளம்பர் |
| 166 | வேந்தன் |
| 167 | வேணியன் |



# அகில இலங்கை கொங்கு வேளாளர் ஒன்றியம்

சடங்குகள் பொதுவாக்கல்
தொகுப்பு நூல்

**நூலாக்கக் குழு**

**தலைவர்**

திரு. நல்லையன் பாலசுந்தரம் கவுண்டர்
தலைவர் - கொங்கு வேளாளர் மன்றம் - ஹட்டன்

**இணைப்பாளர்கள்**

திரு. வேலுசாமி கருணாகரன் கவுண்டர் - தலைவர்
கொங்கு வேளாளர் சங்கம் - பண்டாரவளை

திரு. ஜெயப்பிரகாசம் நிரோஷ்காந்த் கவுண்டர் - செயலாளர்
கொங்கு வேளாளர் சங்கம் - கொழும்பு

திரு. S. சந்திரகேசன் கவுண்டர் - அருமைக்காரர் - பண்டாரவளை
திரு. K. பழனியாண்டி கவுண்டர் - தலைவர் - கொழும்பு
திரு. R. கிருஷ்ணமூர்த்தி கவுண்டர் - செயலாளர் - ஹட்டன்
திரு. V. ஜெயப்பிரகாசம் கவுண்டர் - ஆலோசகர் - கொழும்பு
திரு. K. குமாரவேல் கவுண்டர் - ஆலோசகர் - பண்டாரவளை
திரு. V. செங்கோடன் கவுண்டர் - ஆலோசகர் - பண்டாரவளை
திரு. M. புஸ்பராஜா கவுண்டர் - பொருளாளர் - கொழும்பு
திரு. S.M. பழனிசாமி கவுண்டர் - ஹப்புத்தளை
திரு. K. பாலசுப்பிரமணியம் கவுண்டர் - உப தலைவர் - ஹட்டன்
திரு. V. பெரியசாமி கவுண்டர் - கொழும்பு
திரு. M. சேகர் கவுண்டர் - நிர்வாகக்குழு உறுப்பினர் - கொழும்பு
திரு. S. தங்கராஜா கவுண்டர் - உப பொருளாளர் கொழும்பு
திரு. K. பழனிசாமி கவுண்டர் - செயலாளர் - பண்டாரவளை
திரு. V. செல்லப்பன் கவுண்டர் - பொருளாளர் - பண்டாரவளை
திரு. K. யோகரட்ணம் கவுண்டர் - உப செயலாளர் - பண்டாரவளை
திரு. K. இராமசாமி கவுண்டர் - ஆலோசகர் - ஹட்டன்
திரு. K. ஜெயராம் கவுண்டர் - உப செயலாளர் - ஹட்டன்
திரு. S. சின்னசாமி கவுண்டர் - ஆலோசகர் - ஹட்டன்
திரு. S. நித்தியானந்தன் கவுண்டர் - ஆலோசகர் - பண்டாரவளை
திரு. P. இளங்கோவன் கவுண்டர் - நிர்வாகக்குழு உறுப்பினர் - பண்டாரவளை
திரு. N. மகேந்திரன் கவுண்டர் - உப தலைவர் - ஹட்டன்
திரு. P. ஷண்முகம் கவுண்டர் - பொருளாளர் - ஹட்டன்
திரு. S. மகேஸ்(ரமேஸ்) கவுண்டர் - உப பொருளாளர் - ஹட்டன்
திரு. S. சுந்தரலிங்கம் கவுண்டர் - மக்கள் தொடர்பாளர் - ஹட்டன்
திரு. V. சிவகுமார் கவுண்டர் - உப தலைவர் - பண்டாரவளை
திரு. M. சசிகுமார் கவுண்டர் - நிர்வாகக்குழு உறுப்பினர் - பண்டாரவளை
திரு. K. வசந்தகுமார் - நிர்வாகக்குழு உறுப்பினர் - பண்டாரவளை

ஆதி கணேசன் அன்புடன் வாழி
வெற்றிவேல் கொண்ட வேலவர் வாழி
எம்பெருமான் இணையடி வாழி
பாரத தேசம் பண்புடன் வாழி
மாது உமையவள் மகிழ்வுடன் வாழி!

முப்பது முக்கோடி தேவரும் வாழி
நாற்பத்தொன்னாயிரம் ரிஷிகளும் வாழி
மாப்பிள்ளை பெண்ணும் மகிழ்வுடன் வாழி
வேதம் ஓதிடும் வேதியர் வாழி
கொங்கு நாட்டுக்குடிகளும் வாழி
வாழிய யானும் மகிழ்வுடன் வாழி
என் குரு கம்பர் இணையடி வாழி
வையத்து மக்கள் மற்றவரும் வாழி
காராள குலதிலகர் கவுண்டர்கள் வாழி
வேளாளர் குலதிலகர் வேளாண்மை வாழி

இப்பாட்டு கேட்டவர் எல்லோரும் வாழி
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
மூங்கில் போல் கிளை கிளைத்து முசியாமல்
வாழ்ந்திருக்க!
வாழி மணமக்கள் வந்தோர் வாழ்த்துரைக்க

செல்வம் செழித்திருக்க தீர்க்காயுளாய்
வாழ்ந்திருக்க
பார்த்த சனம் அத்தனையும் பாக்கியம்
பெற்றிருக்க
இருந்த பெரியோர்கள் எல்லாம் இனியது போல்





**பேரன்பான இனிய சொந்தங்களே,**

நமது குடும்ப நிகழ்வுகளின் சடங்கு முறைகளை நாடு முழுவதும் பொதுவாக்க வேண்டுமென 2009 ஆம் ஆண்டு ஹட்டன் கொங்கு வேளாளர் மன்றம் ஆரம்பமானபொழுது என் உள்ளத்தில் தோன்றியது. என் எண்ணத்தை ஹட்டன் செயற்குழுவினரிடம் கூறியபோது மகிழ்வுடன் செவிமடுத்து, ஹட்டன் மன்றத்தின் பிரதான குறிக்கோள்களான குலதெய்வ வழிபாடு, கொங்கு கலாசார பண்பாட்டு அபிவிருத்தி, கல்வி, விளையாட்டு, மாணவர் திறன் அபிவிருத்தி, புலமைப் பரிசில்கள், அங்கத்தவர் நலன்புரி செயற்பாடு என்பனவற்றுடன் சடங்குகள் பொதுவாக்கலும் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று முதல் ஹட்டன் மன்ற செயலாளர், உப தலைவர்கள், ஆலோசகர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் என அனைவரும் பேரார்வத்துடன் ஊக்கமளித்தமை எனக்கு சிறந்த அத்திவாரமாக இருந்தது.

ஹட்டன் கொங்கு வேளாளர் மன்றத்தின் இப்பிரதான குறிக்கோளை நிறைவேற்ற பல முயற்சிகளை எடுத்தோம். முதற்கட்டமாக பண்டாரவளை கொங்கு வேளாளர் சங்கத்துடனும், கொழும்பில் சடங்குகளுடன் சம்பந்தப்பட்ட சில உறவுகளுடனும் ஆரம்ப கலந்துரையாடல்களை ஏற்படுத்தினோம். கொழும்பு கொங்கு வெளாளர் சங்கம் உருவான பின் மேலும் ஊக்கம் பெற்று அவர்களையும் இணைத்து மூன்று அமைப்புகளின் பங்களிப்போடு துரிதமாகச் செயற்பட எண்ணியபோது அதற்கான தலைமைப் பொறுப்பை என்னிடமே ஒப்படைத்தனர். அனைவரினதும் விருப்பத்திற்கேற்ப அதை மகிழ்வுடன் ஏற்று செயற்பாட்டைத் துரிதமாக ஆரம்பித்தோம்

கொங்கு வேளாளர் வரலாறு பற்றிய நூல்களைப் பெற்று மிக நுணுக்கமாக வாசித்தறிந்து ஆரம்ப வரைபை சில கிழமைகளில் முடிக்க இறைநிலையின் ஆற்றல் எனக்குதவியது. பலமுறை கலந்துரையாடினால்தான் இலக்கை அடையலாம் என எண்ணியபோதும் பங்கெடுத்த அனைவரினதும் ஆழமான புரிந்துணர்வுடன் இரு அமர்வுகளில் 95% இலக்கையடைந்தது பேரானந்தத்தைக் கொடுத்தது. தொடர்ந்து இணைப்பாளர்களின் கலந்துரையாடல்களுடன் இத் தொகுப்பு நூல் பூரணப்படுத்தப்பட்டது.

கொங்கு வேளாளர்களின் வரலாறு பற்றி பேராசிரியர்கள், ஆய்வாளர்களின் நூல்களின் அடிப்படையிலேயே இத்தொகுப்பு நூல் உருவானது. அந் நூல்களின் பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளன. விசேடமாக திரு.தூரன் நல் நடராசன் அவர்களின் "கொங்கு வேளாளர் வரலாறு" ஆய்வு நூல் பேருதவி புரிந்தது. பல முயற்சிகளின் பின் அவருடைய தொடர்பு கிடைத்தது பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. நமது முயற்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு மேலும் பல ஆராய்ச்சிகளைச்செய்து நமக்கு வழிகாட்டியாக இருந்தார். அத்துடன் அடுத்த அவரின் பதிப்பில் நாம் எதிர்பார்க்கும் அத்தனை விடயங்களையும் உள்ளடக்கியதாக வெளியிட்டு மிகச் சரியான சடங்கு முறைகளைப் பின்பற்ற வழிவகுப்பார் என எதிர்பார்க்கின்றோம். திரு நல் நடராசன் அவர்களுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

சாலுங் கரகமும் சந்திரரும் சூரியரும்
அம்மி வலமாக அரசாணி முன்னாக
ஆயிரப் பெருந்திரி அதுவும் வலமாக
சுத்தமுடன் கலம் விளக்கிச் சோறரிசி பால்பழமும்
பக்தியுடன் இத்தனையும் பாரித்தார் மணவறையில்
மணவறை அலங்கரித்து மணவாளனை இருத்தி
அழகு மணப்பெண்ணை அலங்காரம் மிகச் செய்து
மாமன் எடுத்து மணவறை சுற்றிவந்து
மகிழ்ச்சியது மீதூற வலம்புறம் தானிருத்தி
குலம்பெரிய மன்னவர்கள் குவலயத்தார் சூழ்ந்திருக்க

இராமன் இவரோ இலக்குமன் இவரோ
கண்ணன் இந்திரன் காமன் இவர்தானோ
அத்தை மகள்தனை அழகு செல்வியை
முத்து இரத்தினத்தை முக்காலிமேல் வைத்து
கணபதி தெய்வம் முன்கட்டும் மாங்கல்யம் வைத்து
அருமைப் பெரியவர் அன்புடன் பூசை செய்து
மாப்பிள்ளை பெண்ணை மணவறையில் எதிர்நிறுத்தி
கெட்டி மேளம் சங்கு நாதம்
கிடுகிடு என்று கொட்டி முழங்க
மாணிக்கம்போல் மாங்கல்யம் வைடூரியம்போல் திருப்பூட்டி
ஆரம்தனை மாற்றி அமர்ந்தபின் மணவறையில்

மாப்பிள்ளையின் மைத்துனரை வாவென்று தானழைத்து
கலம் பெரிய அரிசிதனில் கைகோர்வை தானுமிட்டு
சிங்காரமான தெய்வ சபைதனிலே
கங்காகுலம் விளங்கக் கம்பர் சொன்ன வாழ்த்துரையை
மங்கலமும் கன்னி சொல்ல வாத்திய மெல்லாம் அடக்கி
மறையோர்கள் வேதம் சொல்ல மற்றவர்கள் ஆசிகூற
பிறை ஆயிரம் தொழுது பிள்ளையாருக்குப் பூசை செய்து
அருமைப் பெரியோர் அருகுமணம் செய்த பின்பு
தங்களுக்குத் தங்கள் தாரைக்கோர் பொன் கொடுத்து

உரியதோர் பாட்டன் இருவருடைய கைதனிலே
தண்ணீர் ஊற்றியே தாரையும் வார்த்தபின்பு
பிரியமுள்ள மணவறையை பின்னும் சுற்றிவந்து
மங்கலக் கலியாணம் வகையாய் முடிந்ததென்று
செங்கையினாலே சிகப்பிட்டு இருவருக்கும்
சாப்பாடு போசனம் சந்தோஷமாய் போட
உண்டு பசியாறி உறவுமுறை எல்லோரும்
கொண்டு வந்த பொன்முடிப்பைக் கொடுத்துச் செலுத்துமென்றார்
கலியாணத்தார் தம்மைக் கருத்துடனே அழைத்து

கண்ணாளர் தமையழைத்துப் பொன்னோட்டம் காணுமென்றார்
அப்போது கண்ணாளர் அவ்விடமே தானிருந்து
பணமது பார்த்து குணமது கழித்து
கல்லுவராகன் கருவூர்ப் பணமும்
வெள்ளைப் புள்ளடி வேற்றூர் நாணயம்
சம்மனங்கட்டி சாத்தூர்தேவன்



**இணைப்பாளர் எண்ணத்திலிருந்து.......**

பண்டாரவளை கொங்கு வேளாளர் சங்கம் 13.03.2008ம் ஆண்டில் அங்குரார்ப்பனம் செய்யப்பட்டு 29.02.2020ம் ஆண்டு தனது 13வது அகவையில் காலடி எடுத்து வைக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் “கொங்கு வேளாளர் சடங்கு முறைகள்” பொதுவாக்கல் என்ற இந்நூல் வெளிவருவது சாலவும் பொருத்தமானது என உணர்கின்றேன்.

பொதுவாகவே இச்சடங்கு முறைகளில் அமங்கல சடங்கு முறைகள் ஹட்டனில் ஒரு மாதிரியாகவும், பண்டாரவளையில் வேறு மாதிரியாகவும், கொழும்பில் இன்னொரு மாதிரியாகவும் செய்கின்றார்கள் என்பதைக் கேட்டுக் கேட்டு சலித்து விட்டோம். உண்மையில் யாருக்குமே எது சரி எது தவறு என தெரியாமல் பலதையும் பார்த்துப் பார்த்து நாமாகவே அவற்றைப் பழகிக்கொண்டோம். இப்பொழுதே இதற்கோர் நல்ல தீர்வாக கலந்து பேசி, ஆவணங்கள் ரீதியாக நிரூபிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அறிஞர் பெருமக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி இச்சடங்கு முறைகள் விரிவாக இந்நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சில விட்டுக்கொடுப்புக்கள், ஏற்றுக்கொள்ளுதல் என்ற இரு முக்கியமான பண்புகளின்கீழ் அனைவரும் கலந்துரையாடி இம்முடிவிற்கு வந்திருக்கின்றோம். ஆகவே அனைவரும் இதனை ஏற்று எல்லா இடங்களிலும் ஒரே முறையில் சடங்கு முறைகளை மேற்கொள்ள துணிய வேண்டுமென வினயமாக கேட்டுக்கொள்கின்றேன். மற்றவர்களுக்கும் இதன் முக்கியவத்துவத்தை உணர்த்தி மற்ற சமூகங்களிலிருந்து நமது சமுதாய பாரம்பரிய விழுமியங்களை இதன்மூலம் வெளிப்படுத்துவதற்கு இவை நல்ல வாய்ப்பாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நமது எதிர்கால சந்ததியினருக்கு செய்ய வேண்டிய பணிகள், பொறுப்புக்கள் நமக்கு உள்ளன. சடங்கு முறைகளாகட்டும் குலதெய்வ வழிபாடுகள், பாரம்பரிய பண்பாடுகளைப் பேணல், கல்வி, மருத்துவம், தொழில் வாய்ப்புக்கள் என இன்னோரன்ன பணிகளாகட்டும் நாம் செய்து வருகின்றோம். நமது சமூகத்தை ஒரு நேரான முறையில் பிளவுபடாத வகையில் சிறப்பாக வழி நடாத்தி ஒரு தூய்மையான சமுதாயமாகக் கொண்டுசெல்வதற்கு இவ்வாறான விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்த வகையில் நமது பண்டாரவளை கொங்கு வேளாளர் சங்கத்தின் ஆலோசகர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மகளிர் பிரிவு அங்கத்தவர்கள் ஆகியோரின் மேலான ஒத்துழைப்புக்கள் என்றுமே எமக்கு உறுதுணையாக இருந்து வருகின்றது.

அடைக்காயும் வெற்றிலையும் அடிமடியிற் கட்டியபின்
முன்னர் ஒருதரம் விநாயகருக்கு இணைநோக்கி
பின்னர் ஒருதரம் பிறந்தவருக்கு இணைநோக்கி
இந்திரனார் தங்கைக்கு இணைநோக்கி நின்றபின்பு
தேங்காய் முகூர்த்தமிட்டுச் செல்வ விநாயகனைப்
பாங்காய் கைதொழுது பாரிகொள்ளப் போறோமென்று
மாதாவுடனே மகனாரும் வந்திறங்கி
போதவே பால்வார்த்துப் போசனமும் தான் அருந்தி
தாயாருட பாதம் தலை குனிந்து தண்டனிடப்
போய்வா மகளே என்றாள். பூங்காடிக்கு மாலையிடப்
பயணமென்று முரசுகொட்டப் பாரிலுள்ள மன்னவர்கள்

மதகரி அலங்கரித்து மன்னவர்கள் ஏறிவர
தந்தையானவர் தண்டிகை மேல்வர
தமையன் ஆனவர் ஆனையின் மேல்வர
தேடியே வந்தவர்கள் தேரரசர் போல்வர
பேரணி முழங்க பெரிய நாகரம் அடிக்க
பூமிதான் அதிர புல்லாங்குழல் ஊத
எக்காளம் சின்னம் அடிமுரசு பெரியமேளம்
கைத்தாள பம்பை கனகதப்பட்டை தான் முழங்க

துத்தாரி நாதசுரம் சோடிக்கொம்பு தானூத
சேகண்டி சங்கு திமிர்த்தாள பம்பையுமே
வலம்புரிச் சங்கு வகையாய் ஊதிவர
உறுமேளம் பறைமேளம் உறம்மை திடும்படிக்க
பலபல விதமான பக்கவாத்தியம் முழங்க
பல்லாக்கு முன்னடக்க பரிசுகள் பறந்துவர
வெள்ளைக் குடைவெண் சாமரம் வீதியில் வீசிவர
சுருட்டிய சூரியவானம் தீவட்டி முன்னடக்க
இடக்கை வலக்கை இனத்தார் சூழ்ந்துவர
குதிரை மீதமர்ந்து குணமுள்ள மாப்பிள்ளைதான்

சேனைகள் முன்னே சிறந்து முன்னடக்க
கட்டியங்கள் கூறி கவிவாணர் பாடிவர
நாட்டியங்கள் ஆடிவந்தாள் நல்ல தேவரடியாள்
பாகமாஞ் சீலைப் பந்தம் பிடித்திட
மேகவர்ணச் சேலை மின்னல்போல் மின்ன
அடியாள் ஆயிரம் பேர் ஆலாத்தி ஏந்திவர
பொண்ணு வீட்டார் பிரியமுடன் எதிர்வந்து
மன்னவர் தங்களை வாருங்கள் என்றழைத்து
வெகுசனத்துடனே விடுதியில் விட்டுவந்தார்
வாழ்வரசி மங்கைக்கு வரிசை அனுப்புவோம் என்று

நாழியரிசிக் கூடை நன்றாக முன்னனுப்பி
பொன்பூட்டப் போகிறவர் பேடை மயிலிற்கு
நல்ல முகூர்த்தம் நலமுடன் தான் பார்த்து
பெட்டிகளும் பேழைகளும் பொன்னும் சீப்புகளும்
பட்டுத் துணி நகையும் பார்க்கக் கண்ணாடியும்
சத்துச்சரப்பணி தங்கம் பொன் வெள்ளிநகை



**இணைப்பாளர் உள்ளத்திலிருந்து.............**

சொந்தங்களுக்கு வணக்கம்,

பேரூர் ஆதினத்தின் அருளாசியால் தோற்றம் பெற்ற எமது சங்கத்தின் முதல் பொது நிகழ்வாக 2016ம் ஆண்டு ஜுலை மாதம் இடம்பெற்ற "உறவுகள் ஒன்றகூடல்" நிகழ்வில் முன்வைக்கப்பட்ட சடங்குகள் பொதுவாக்கல் யோசனை இன்று வரைபாகியுள்ளமை கண்டு பெருமகிழ்ச்சி.....

எமது சங்கத்தின் 2வது பொதுக் கூட்டம் இவ்வருடம் மார்ச் மாதம் 15ம் திகதி நடைபெறும். அன்றைய தினம் கொழும்பு சங்கத்தினருக்கு சடங்குகள் பொதுவாக்கல் தொகுப்பு நூல் வெளியிடப்படுகின்றமை இரட்டிப்பு மகிழ்வளிக்கிறது.

எம் சங்கத்தின் நோக்கம்,

அ) சமுதாய ஒற்றுமை
ஆ) சமுதாயத்துக்கான மருத்துவ மற்றும் கல்வி மற்றும் மேம்பாட்டு உதவிகள்

எமது சங்கம் அங்கத்தவர்களையும், சமூகத்தினரையும் ஒற்றுமையாக பயணிக்க வைப்பதில் மிகப் பிரயத்தனம் மேற்கொண்டு வரும் நிலையில் எம்மவர் சடங்குகள் இலங்கை பூராகவும் பொதுவாக்கப்படுகின்ற நிலையில் எம் சமூகம் மேலும் பலப்படுத்தப்படும். இந்நிலையில் நிதி நிலையில் சிறப்பாக காணப்படுகின்ற எம் சங்கத்தால் சமூகத்துக்கான மருத்துவ, கல்வி மற்றும் மேம்பாட்டு உதவிகளை மேலும் சிறப்பாக செய்யக் கூடியதாக இருக்கும்.

எமது சமுதாயத்தின் சிறப்பை குலதெய்வ வழிபாடு, குலம் சார் உறவுமுறை, நாம் பேசும் செம்மொழி, சூட்டப்படும் பெயர்கள் என்பன எடுத்தியம்புகின்றன. இனிமேல் சடங்குகள் விடயத்தில் எம் சமுதாயம் மென்மேலும் சிறக்கும். இன்றைய இளம் தலைமுறையினர் மங்கல, அமங்கல சடங்குகளின் போது இத்தொகுப்பு நூலை கொண்டு சடங்குகள் சரியாக இடம்பெறுகின்றனவா என ஆய்வு செய்யலாம். காலவோட்டத்தில் இளைஞர்களே சடங்குகளை செய்ய தலைமையேற்கலாம்.

இத்தொகுப்பு நூலோடு சேர்த்து கொங்கு திருமண மையமும் உருப்பெறுகிறது. ஹட்டன் மன்றத் தலைவர் திரு. நல்லையன் பாலசுந்தரம் அவர்கள் இதற்கு பொறுப்பேற்கிறார். எம்மவர் நிலைக்க இச்செயற்பாடு உதவும்.

அடுத்த கட்டமாக நாம் எம் பிள்ளைகளுக்கு சூட்டும் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக அமைய வேண்டுமென உறுதிபூணுவோம்.

நன்றி

அன்புடன் ஜெயப்பிரகாசம் நிரோஷ்காந்த்
செயலாளர் - கொங்கு வேளாளர் சங்கம், கொழும்பு.
இணைப்பாளர் - அகில இலங்கை கொங்கு வேளாளர் ஒன்றியம்.
838/1A றோயல் கார்டன்ஸ், அளுத்மாவத்தை வீதி, கொழும்பு 15, இலங்கை.

தாலிப்பொருத்தம் தவறாமல் கேட்டு
வாசல் கௌரி வலிதென நிமித்தம்
தெளிவுடன் கேட்டுச் சிறியோர் பெரியோர்
குறிப்புச் சொல்லக் குறிப்புரை கேட்டு
உத்தம பாக்கியம் தச்சனைக் கேட்டு
பொருந்தி இருத்தலால் பூரித்து மகிழ்ந்து
சிலபேர் உடனே சீக்கிரம் புறப்பட்டு
வெண்கல முரசம் வீதியில் கொட்டத்
தங்க நகரி தானலங் கரித்து

முத்து பதித்த முரசம்பரங்கொட்டி
சித்தரக் கூடம் சிறக்க விளங்கி
உரியவர் வந்திருக்கார் உன்மகளுக்கென்று
பிரியமுடன் வெற்றிலை மடிதனில் கட்டி
நாளது குறித்து நல்விருந் துண்டு
பூட்டும் தாலிக்குப் பொன்னது கொடுத்து
வாழ்வது மனைக்கு மனமகிழ வந்துமே
கற்றோர் புலவர் கணக்கரை அழைத்து
தேன்பனை யோலை சிறக்கவே வாரி
திசைதிசை எங்கும் தென்னவரை அனுப்பி

கலியாண நாளைக் கணித்து அறிவித்தார்
வாழை கமுகு மகமே ருடனே
சோலை இலையால் தோரணங் கட்டி
மூத்தோர் வந்து மெழுகி வழித்துப்
பார்க்குமிடம் எங்கும் பால்தனை தெளித்து
பெண்டுகள் வழங்கும் பெரிய கலத்தைக்
கொண்டு வந்தனைக் குணமுடன் விளக்கி
நேரிய சம்பா அரிசியே நிறைத்துப்
பாரிய வெல்லம் பாக்கு வெற்றிலை
சீருடன் நெய்யும் தேங்காய் பழமும்

வாரியே வைத்து வரிசை குறையாமல்
முறைமைய தாகவே முக்காலி மேல் வைத்து
குணமது பொருந்திய குடிமகள் அழைத்து
போன மச்சம் முகமது துடைத்து
எழில் கூந்தலுக்கு எண்ணெய் தனையிட்டு
குணமது சீயக்காய் கூந்தலில் தேய்த்து
ஏழு தீர்த்தம் இன்புற வட்டு
பேழையுமுடனே விளாவியே வார்த்து
செந்நெல் சோற்றால் சீக்கடை கழித்து

வண்ணப் பட்டுடை வஸ்திரந் தன்னை
நெருங்கக் கொய்து நேர்த்தியாய் உடுத்தி
அன்ன முப்பழமும் ஆவின் பாலும்
மன்னவர் முன்னே வந்தவர் உடனே
வாசல் களரி மதிப்புடன் கூட்டி
சாணங் கொண்டு தரைதனை மெழுகி
கணபதி ஒன்றைக் கருத்துடன் நாட்டி



2.02 அருமைக்காரர் இல்லாதவிடத்து பங்காளி பிள்ளையார் வழிபாட்டிற்கும், முகூர்த்தக்காலுக்குமென 02 தேங்காய்களை உடைத்து, முகூர்த்தக்கால் நடும் குழிக்கும், முகூர்த்தக்காலுக்கும், சில்லறைக் காசுடன் நவதானியத்தை மஞ்சள் நீரில் தோய்த்து முடிந்துள்ள துணிக்கும் சாம்பிராணி, சூடம் காட்டி பூசை செய்தல்.

2.03 மஞ்சள் நீரில் தோய்த்து முடிந்துள்ள துணியை முகூர்த்தக்காலில் கட்டுதல். பின் முகூர்த்தக்காலுக்கு விபூதி இட்டு பொட்டிடல்.

2.04 முகூர்த்தக்கால் நடும் குழியில் சில்லறைக் காசு, விபூதி, நவதானியம் போட்டு நீர், பால் ஊற்றுதல். (ஒற்றை எண்படி பெரியவர்கள் இதனை செய்தல்)

2.05 எழுதிங்கம் செய்துள்ள 03 சுமங்கலிப் பெண்களும், 02 பங்காளிகளும் சேர்ந்து முகூர்த்தக்காலை குழியில் நடுதல்.

2.06 முகூர்த்தக்கால் அடியில் மங்கலப் பொருட்கள் வைத்து மீண்டும் அதற்கு தீபாராதணைக் காட்டுதல்.

2.07 வருகை தந்துள்ளவர்களுக்கு விபூதி, பொட்டு கொடுத்தபின் ஊறவைத்த பச்சை அரிசியுடன் கருப்பட்டி கலந்து கொடுத்தல்.

குறிப்பு: முகூர்த்தக்கால் நடும் இவ்வைபவத்திற்கு மணமகன் அல்லது மணமகள் அருகில் வரத் தேவையில்லை.

### 3. மங்கல நீராடல் / நலுங்கு விருந்து

3.01 நீராட்டுதல் இரு வீட்டிலும் தனித்தனியாக நடைபெறும்.

3.02 இரு வீட்டிலும் தனித்தனியே பச்சை பந்தலிட்டு, வாழை மரம் கட்டி, குருத்து, மாவிலை தோரணை அலங்காரம் செய்து செஞ்சோறு சுற்றி நீராட்டியப் பின்னர் புளியாக்கை சுற்றுதல். மணமகனின் சகோதரிகளும் மணமகளின் அத்தை மாமன்மாரும் அவரவர் வீட்டாருக்கு நலுங்கு விருந்து வைப்பர். ஆரம்பத்தில் மணமக்களுக்கு இனிப்பு பலகாரம், நெய், கருப்பட்டி, வாழைப்பழம் ஆகியன கலந்து கொடுத்தல்.

### 4. திருமண நாளன்று வீட்டிலிருந்து புறப்படுதல்

4.01 திருமணத்திற்கு முதல்நாள் மணமகனுக்கு தாயார் தயிர் சாதம் ஊட்டுதல்.

4.02 மணமகன், மணமகள் வீட்டிலிருந்து அழைத்து வரும்போது பெற்றோர், பெரியவர்களிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளல்

# கெட்டி மேளம்

## திருமண தகவல் பிரிவு

**கொங்கு வேளாளர் இனத்தில் திருமண வயதடைந்த ஆண், பெண் விபரங்களை அவர்களின் பெற்றோர்மூலம் பெற்று "திருமண தகவல் பிரிவு" அமைக்க அகில இலங்கை கொங்கு வேளாளர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது. மேலதிக விபரங்களை நீங்கள் சார்ந்துள்ள அமைப்பின் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.**





6.02 மணமகன் அழைக்கப்பட்டு கணபதி பூசை செய்து மணமகன் வீட்டைச் சேர்ந்த எழுதிங்கம் செய்துள்ள 05 சுமங்கலி பெண்களால் முகூர்த்தக்கால் நடுதல்.

6.03 திட்டிக்கழித்தல் - எழுதிங்கம் செய்துள்ள 05 சுமங்கலி பெண்கள், செஞ்சோறு அடை, நிறைநாழி, கும்பம், காமாட்சி விளக்கு, ஆரத்தி ஆகியன சுற்றுதல். தாய் மாமன் வெற்றிலை, மஞ்சள், வாழைப்பழம் கொடுக்க அதனை திட்டிக் கழித்தல் பெண்கள் முந்தானையில் வாங்குதல்.

6.04 கங்கணம் கட்டுதல்

6.05 03 பங்காளிகளால் மணப்பொங்கல் வைத்து பூசை செய்தல்.

6.06 தாய்மாமன் தம்பதிகள் மணமகனுக்கு திருமண உடை, மாலை கொடுத்து அழைத்துச் செல்லல்.

6.07 மணமகள் அழைக்கப்பட்டு முகூர்த்தக்கால் வழிபாடு செய்து, உரலில் வைக்கப்பட்டுள்ள பெருந்திரி (நந்தா விளக்கு) ஏற்றல்.

6.08 திட்டிக்கழித்தல் - எழுதிங்கம் செய்துள்ள 05 சுமங்கலி பெண்கள், செஞ்சோறு அடை, நிறைநாழி, கும்பம், காமாட்சி விளக்கு, ஆரத்தி ஆகியன சுற்றுதல். தாய் மாமன் வெற்றிலை, மஞ்சள், வாழைப்பழம் கொடுக்க அதனை திட்டி கழித்த பெண்கள் முந்தானையில் வாங்குதல்.

6.09 கங்கணம் கட்டுதல்.

6.10 03 பங்காளிகளால் மணப்பொங்கல் வைத்து பூசை செய்தல்.

**குறிப்பு:** மணப்பொங்கல், செஞ்சோறு அடை ஆகியவற்றை வீட்டில் தயாரித்து எடுத்து வரப்படல் வேண்டும்.

6.11 தாய்மாமன் தம்பதிகள் மணமகளுக்கு திருமண உடை, மாலை கொடுத்து அழைத்துச் செல்லல்.

6.12 மணமகன் மணப்பந்தலுக்கு அழைக்கப்பட்டு தாயின் சகோதரர்களான தாய்மாமன்மாருக்கு விபூதி, பொட்டு வைத்து, பால் பழம் கொடுத்தல் (மாமன் மகன், அத்தைமார் இதில் பங்கேற்க வாய்ப்பில்லை)

6.13 தாய் மாமன் மணமகனுக்கு விபூதி, பொட்டு வைத்து நெற்றிப்பட்டம் கட்டி மாலை அணிவித்தல். பின் மணமகன் தாய்மாமனிடம் ஆசீர்வாதம் பெற்று சீர் (வேட்டி) வழங்குதல். ஏனைய தாய்மாமன்மார் இருப்பின் அவர்களும் மணமகனுக்கு விபூதி, பொட்டு வைத்து ஆசீர்வதித்தல். அவர்களுக்கும் சீர் (வேட்டி) வழங்கல். (மாமன்மகன், அத்தைமார் இதில் பங்கேற்க வாய்ப்பில்லை)

26. **உணவருந்துதல்**

கொள்ளி வைத்தவர், நீர்மாலை எடுத்தவர்கள், இறந்தவரின் வாழ்க்கைத் துணை ஆகியோர் முதலில் இலையில் உணவுண்ட பின் ஏனையோர் உணவருந்துதல்.

27 **புண்ணியதானம் மோட்ச விளக்கு**

வீட்டில் 30 நாட்கள் விளக்கு, நீர் செம்பு வைத்து விளக்கை அணையாமல் பார்த்துக்கொண்டு, 31ம் நாள் வீட்டில் புண்ணியதானம் வசதிக்கேற்ப செய்து, கோயிலில் மோட்ச விளக்கு வைத்தல். அக்காலத்தில் புனிதத் தன்மை பேணப்படுவது நல்லது. அதன்பின் வீட்டில் சுவாமி அறைக்கு வழமைபோல் விளக்கு வைத்தல்.

28. **சோறாக்கிப் போடல்**

இறப்பு வீட்டில் உள்ளவர்களுக்கு மகள் முறையினரும், சம்பந்தி வீட்டாரும் புண்ணியதானம் நடந்து மோட்ச விளக்கு வைத்தபின் வசதியான தினத்தில் விரும்பிய உணவு சமைத்து, விருந்து செய்து ஆறுதல் கூறுவர்.

**குறிப்பு:**

**சிதைக்கும், பிண்டத்திற்கும் மட்டுமே இடது சுழலாக சாம்பிராணி, சூடம் காட்டுதல் வேண்டும். மற்றைய எல்லாச் சந்தர்ப்பத்திலும் வலச் சுழலாகவே காட்டுதல் வேண்டும்.**



6.25 தாலி கட்டுதல். மணமகனின் சுமங்கலி சகோதரி அல்லது பங்காளி முறை சுமங்கலி சகோதரி காமாட்சி விளக்கை கையிலேந்தி மணமகளுக்கு பின்னால் நிற்க, மணமகன் எழுந்து நின்று மணமகள் கழுத்தில் தாலி அணிவித்தல் தாலிக்கொடியுடன் மஞ்சள் கயிறையும் இணைத்து அணிவிப்பது உகந்தது.

6.26 இருவீட்டு பெற்றோர், நெருங்கிய உறவினர்கள் சபையோரை மேடையிலிருந்தோ அல்லது அருகில் சென்றோ கும்பிட்டு வரவேற்றல்.

6.30 மணமகன் மணமகளுக்கும், தாலிக்கும் குங்குமம் வைத்தல். எழும்பி நின்று மணமக்கள் மாலை மாற்றிக்கொள்ளல். தோழன், தோழி மாலையை கழற்றிக்கொடுக்க 03 முறை மாற்றிக்கொள்ளல்.

6.31 மணமக்கள் மணப்பந்தலை வலம் வருதல்.

6.32 முதலாவது சுற்றில் மணமகன் மணமகளின் வலது பாதத்தை அம்மியில் எடுத்து வைக்க, மணமகனின் சகோதரி அல்லது அவர்களது பங்காளி முறைப்பெண் மெட்டியிடும் விரலில் பால் தடவி, பொட்டிட்டு மெட்டி அணிவித்தல். தேங்காயால் இலேசாக மெட்டியை 3 முறை தட்டுதல்.

6.33 இரண்டாவது சுற்றில் மணமகன் மணமகளின் இடது பாதத்தை அம்மியில் எடுத்து வைக்க, மணமகனின் சகோதரி அல்லது அவர்களது பங்காளி முறைப்பெண் முன்பு போலவே மெட்டி அணிவித்தல். மணமகள் மெட்டி அணிவித்தவருக்கு சீர் (பணம்) கொடுத்தல்.

6.34 மூன்றாவது சுற்றில் மணமக்கள் 03 முறை மோதிரம், சங்கு எடுக்கும் நிகழ்வு பெறல்.

6.35 மணமக்கள் 03 முறை பால், பழம் ஊட்டுதல்

6.36 குழந்தைச் செல்வம் பெற மணமக்களுக்கு குழந்தை கொடுத்தெடுத்தல்.

6.37 மணமக்களை பெற்றோர், தாய்மாமன்மார், அத்தைமார், பெரியோர் ஆசீர்வதித்தல்.

6.38 ஆரத்தி எடுத்தல். இரு வீட்டாரும் கலந்து இதை செய்தல்.

6.39 குருக்களுக்கு தட்சணைக்கொடுத்து ஆசீர்வாதம் பெறல்.

7. **வெளி நிகழ்வுகள்**

7.01 வீடு செல்லும் வழியில் முதலில் முளைப்பாரியை வெற்றிலை சூடத்துடன் ஆற்றில் விடல்.

7.02 கும்பத்தில் வைத்துள்ள தேங்காயை முதல் செல்லும் கோயிலில் செதிர் தேங்காயாக உடைத்தல்.

18. **கொள்ளிக் குடம் உடைத்தல்**

கொள்ளி வைப்பவர் நீர் கலயத்துடன் 03 முறை சுற்றுதல். ஒவ்வொரு சுற்றுக்கும் நாவிதன் ஒரு ஓட்டடையை சட்டியில் போடுவார். ஒவ்வொரு சுற்றுக்கும் ஒரு சந்தனக்குச்சி குழியின்மேல் வைக்கப்படும். 03வது சுற்று முடிவடைய நீர் கலயத்தை தலைக்குப் பின்புறமாகப் போட்டு உடைத்தபின் மைத்துனர் முறையானவர் மேஸ்திரி மாத்தால் தலையை மூடி அவரது கையில் கத்தியைக்கொடுத்து வெளியில் கூட்டிச்செல்லல். அன்றே பால் ஊற்றுவதாயின் கொள்ளி வைத்தவரைக் கூட்டிவந்து நவதானியம் போட்டு, பலகாரங்கள் வைத்து, இளநீர் கண் திறந்து, பத்தி கொழுத்தி, சிட்டி விளக்கு வைத்து, சூடம் காட்டி பூசை செய்து எள்ளுடன் கலந்து பால் ஊற்றுதல்.

19. **எரித்தல்**

சிதையை உரிய இடத்தில் வைத்தபின், மேற்கூறியவாறு வாய்க்கரிசி போடும்வரையுள்ள சடங்குகள் செய்தபின்னர் கொள்ளி வைப்பவர் நீர் கலயத்துடன் 03 முறை சுற்றுதல். ஒவ்வொரு சுற்றுக்கும் நாவிதன் ஒரு ஓட்டடையை சட்டியில் போடுவார். ஒவ்வொரு சுற்றுக்கும் ஒரு சந்தனக்குச்சி பெட்டியின்மேல் வைக்கப்படும். 03வது சுற்று முடிவடைய நீர் கலயத்தை தலைக்குப் பின்புறமாகப் போட்டு உடைத்தபின் மைத்துனர் முறையானவர் மேஸ்திரி மாத்தால் தலையை மூடி அவரது கையில் கத்தியைக்கொடுத்து வெளியில் கூட்டிச்செல்லல். அதன்பின் கொள்ளி வைப்பவரை கூட்டிவந்து கொள்ளி வைத்தல்.

20. **இழவு காணுதல்**

மயானத்தில் இறந்தவர் வீட்டாரும், நெருங்கிய உறவினர்களும் வரிசையாக நின்று அனைவருக்கும் கை நீட்டிக்கொள்ளல்.

21. **சாம்பல் எடுத்தல்**

கொள்ளி வைத்தவர் கையின் பின்புறத்தால் எழும்புகளை எடுத்து கலயத்தில் போடுதல் பின் சாம்பலும் அதனுடன் சேர்த்தல். அக்கலயத்தை தேசிக்காய் முடிந்த வெள்ளைத் துணியால் கட்டிய பிறகு, ஏனைய மிகுதிகளை அங்கேயே குழிவெட்டி புதைத்து பால் ஊற்றும் சடங்குகளைச் செய்தல்.

22. **கங்கையில் கரைத்தல்**

கலயத்தை கங்கையில் விட அதற்குரிய இடம் சென்று சாம்பலை நீருடன் கரைத்து பின் கலயத்தை ஓடும் நீரில் உடைத்தபின் வெற்றிலையில் சூடம் கொளுத்தி விட்டுவிடல்.



## அமங்கலச் சடங்குகள்

1. **முதல் சடங்கு**

இறந்தவரை தலை தெற்கு பக்கம் அதாவது பார்வை வடக்கு நோக்கி வைத்தல். விளக்கேற்றிய பின் தேங்காய் உடைத்து அதன் 02 மூடிகளிலும் சோறு வைத்து விளக்கு ஏற்றுதல். அவற்றை அரிசியும், கருப்பட்டித் துண்டுகளும் உள்ள தட்டில் வைத்தல்.

நிறைநாழியும், பத்தியும் ஒழுங்குசெய்தல். அதன்பின் பெட்டியைத் திறந்து பங்காளியால் சாம்பிராணி, சூடம் காட்டி நெற்றியில் விபூதி சந்தனம் இட்டு 25 சதம் காசு வைத்து அதன்மேல் பொட்டு வைத்தல். (சிதைக்கு சாம்பிராணி, சூடம் காட்டும்போது இடச்சுழலாக காட்டுதல் வேண்டும்)

பூப்படையாத பெண்பிள்ளைகள், 14 வயதிற்குக் குறைந்த ஆண் பிள்ளைகள் இறந்தால் விளக்கு வைத்து, நெற்றியில் விபூதி பூசி பொட்டு வைத்தல். (தேங்காய் உடைத்தல், நிறைநாழி, நெற்றிக்காசு தேவையில்லை)

2. **நீர்மாலை**

02 பங்காளிகள், 01 மைத்துனர் என மூவர் நீர் மாலை எடுத்தல். (05 பேர் நீர் மாலை எடுப்பதாயின் 03 பங்காளிகள் 02 மைத்துனர் அடங்குவர்). நீர்மாலை எடுக்குமிடத்தில் எடுப்பவர்களுக்கு நாவிதனால் விபூதி பூசி பூச்சரம் போட்டு வெற்றிலையில் விபூதி வைத்து, சூடம் காட்டி நீர்மாலை எடுத்தல். (வலச் சுழலில் சூடம் காட்டல் வேண்டும்).

3. **எண்ணெய் அரப்பு**

கொள்ளி வைப்பவரே முதலில் எண்ணெய் அரப்பு வைத்து அதன் பின்னரே மற்றவர்கள் வைத்தல் வேண்டும். வலது கரத்தின் நடு மூன்று விரல்களின் பின் பக்கத்தால் தலையில் வைத்தல்.

4. **நீரூற்றுதல்**

கொள்ளி வைப்பவர் முதலாவதாக 03 முறை கையால் சிதைக்கு நீர் தெளித்து பின் ஏனையோரையும் இணைத்துக்கொண்டு 03 முறை தரையில் நீரூற்றிக்கொண்டே பெட்டியை சுற்றி வருதல்.

other side

5. **குளிப்பாட்டுதல்** (முகம் சுத்தம் செய்தல்)

நெற்றிக்காசை எடுத்து, மாலையையும் கழற்றிவைத்து கொள்ளி வைப்பவர், நீரால் முகத்தைக் கழுவி, சிதைக்கு விபூதி சந்தனம் வைத்து காசையும் வைத்து அதன்மேல் பொட்டு வைத்தல். மாலையையும் அணிவித்தல்.

6. **சிதைக்கு சூடம் காட்டுதல்.** (இடச் சுழல்)

7. **கோடி எடுத்தல்.**

கோடியை அவரவர் கொண்டுவந்து (எண்ணெய் மற்றும் ஏனைய பொருட்கள் தேவையில்லை) நாவிதன் யாருடையது எனக் கூற கொண்டுவந்தவர்களே கோடியைப் போடுதல். பிறந்த வீட்டு கோடி, புகுந்த வீட்டு கோடி, சம்பந்தி கோடி என்ற மூன்று மட்டுமே போதுமானது.

8. **நெய்பந்தம்**

பேரப்பிள்ளைகள் நெய்பந்தத்துடன் சுற்றி வருதல்

9. **சீதேவி** (ஆண், பெண் வாங்குதல்)

ஆண் இறந்தால் மனைவி அல்லது மூத்த மருமகளும், பெண் இறந்தால் மூத்த மருமகளும் சீதேவி வாங்குவர். சீதேவி வாங்குபவர் நடுவில் வெற்றிலை மஞ்சளுடன் வர, முன்னால் வரும் பெண் காமாட்சி விளக்கையும், பின்னால் வரும் பெண் நிறைநாழியையும் கொண்டு 03 முறை சுற்றி வந்து, 03ம் முறை இறந்தவரின் வலது உள்ளங்கையில் வைத்து பின்புறமாக எடுத்தல். பின் வீட்டினுள்ளே உயிர் விட்ட அல்லது இறந்தவரை வைத்திருந்த இடத்தில் வைத்தல்.

10. **இளம் வயதினர்** / **திருமண வயதினர் இறப்பு**

திருமண வயதினர் இறந்தால் வாழைக்குற்றியை அருகில் நாட்டி கங்கணம் கட்டி, மாலைகள் மாற்றி, மஞ்சள் முடியப்பட்ட தாலியை கன்னி வாழைக்குக் கட்டி கன்னித்தன்மை கழித்தல். ஆண் இறந்தால் சிதைக்கு வலப் பக்கமும், பெண் இறந்தால சிதைக்கு இடப் பக்கமும் வாழையை நாட்ட வேண்டும். ஆண் இறந்தால் வாழைக்கு பட்டுத்துணியும், பெண் இறந்தால் வாழைக்கு வேட்டியும் கட்ட வேண்டும்.

11. **வாய்க்கரிசி போடல்**

ஆண் இறந்தால் மனைவி வாய்க்கரிசி போட்டபின்பே ஏனைய பெண்கள் வீட்டில் வைத்து வாய்க்கரிசி போடுதல். மயானத்திற்கு வரமுடியாத யாரும் இருப்பின் அவர்களும் போடலாம். அரிசியுடன் சில்லறைக்காசு கலந்து வாய்க்கருகில் போட வேண்டும்.



12. **கணவன் இறந்தால்**

பெண் உயிருடன் இருந்து ஆண் இறந்தால் அப்பெண்ணுக்குரிய அமங்கல சடங்கு, தாரமிழந்த பெண்களால் முகம் கழுவி, பூ வைத்து, பொட்டிட்டு, பின் மாலை மாற்றிப் போட்டு, மேஸ்திரி மாத்தால் முகத்தை மூடி கழுத்திலுள்ள நூலை அப்பெண்ணின் சகோதரன் வெட்டி எடுத்து இறந்தவரின் காலில் கட்டியபின் வீட்டினுள் கூட்டிச்செல்லல். தாலி கழற்றி பாலில் போடும் நிகழ்வு வீட்டினுள் நடைபெறும்.

13. **மனைவி இறந்தால்**

தாலி மற்றும் ஆபரணங்களை மயானம் வரைச்சென்று அங்குதான் இறுதியில் கழற்ற வேண்டும். (தாலியை கணவன் கழற்றுவது உகந்தது)

14. **சிறுபிள்ளைகள் இறந்தால்**

பூப்படையாத பெண்பிள்ளைகள், 14 வயதிற்குக் குறைந்த ஆண் பிள்ளைகள் இறந்தால் எவ்வித சடங்குகளும் இல்லாமல் விளக்கு வைத்து பின் சிதையை எடுக்கும்போது மஞ்சள் நீர் தெளித்து எடுத்தல். பெண் பிள்ளைக்கு காது குத்தாமல் இருந்தால் காது குத்தியபின்பே (சிறு ஊசியின் மூலம் காது குத்தலாம்) சிதையெடுத்தல். பால் வைக்கும் சடங்கு நடைபெறும்.

15. **சிதை எடுத்தல்**

இறந்தவரின் தலை முன்னே இருக்க பார்வை வீட்டைநோக்கி இருக்குமாறு எடுத்துச் செல்லல். வீட்டிலிருந்து சிதையை எடுக்கும் தருணத்தில் தேவாரம் பாடுதல். சிதை எடுத்துச்செல்லும்போது கொள்ளிச் சட்டி கொண்டுசெல்லக் கூடாது.

16. **பாடை மாற்றுதல்**

ஊர் வழக்கப்படி அதற்கான முச்சந்தியில் சிதையை 03 முறைச் சுற்றி, 03 முறை மேலும் கீழுமாக அசைத்து முகம் மயானத்தை பார்த்தவாறு (தலை பின்பக்கமாக இருத்தல்) எடுத்துச் செல்லல்.

17. **வாய்க்கரிசி** / **சிதை அடக்கம்**

சிதையை இறக்கி வைத்தபின்னர், கொள்ளி வைப்பவருக்கு கை சவரம் செய்து அவரது விருப்பத்திற்கு ஏற்ப மொட்டை அடித்து அல்லது முகச் சவரம் செய்து முடித்தபின் சடங்குகளை ஆரம்பித்தல். இறந்த உடலில் ஆபரணம் இருப்பின் அவற்றை கழற்றியபின் ஒரு கோடியில் 03 முழந்துண்டு கிழித்து, ஒரு துண்டில் கழற்றிய ஆபரணங்களை முடித்து வீட்டாருக்கும் ஏனைய ஒரு துண்டில் நெற்றிக்காசு முடித்து குழி வெட்டியவருக்கும் (தோட்டி), மூன்றாவது துண்டை நாவிதனுக்கும் கொடுத்தல். ஆண்கள் சிதைக்கு அரிசியுடன் சில்லறைக்காசு கலந்து வாய் அருகில் வாய்க்கரிசி போடுதல். பின் இறந்த உடலைச் சுற்றி உப்பு கொட்டிய பின் பெட்டியை மூடி குழியில் இறக்கி கொள்ளி வைப்பவர், நீர்மாலை எடுத்தவர்கள் வலது கரத்தில் பின்புறமாக மண் தள்ளியபின் ஏனையோர் மண் போடுதல். பின் குழியை மூடுதல்.

7.03 மணமக்கள் ஊர்க்கோயிலை வழிபட்டு மணமகன் வீடு செல்லல். மணமகனுக்கு கும்பிடு பணம் கொடுத்தல். பின்னர் தம்பதிகள் மணமகள் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போதும் அவர்களது ஊர்க்கோயிலில் வழிபட்டு வீடு செல்லல். மணமகளுக்கு கும்பிடு பணம் கொடுத்தல். (கும்பிடு பணம் மணமக்களுக்கே சேரும்)

7.04 மணமகள் வீட்டில் அவர்களது தாய்மாமன்மாரால் மணமக்களின் மாலைகளைக் கழட்டுதல்.

7.05 மணமக்கள் மீண்டும் மணமகன் வீடு செல்லுதல்

7.06 திருமணம் முடிந்து அடுத்த ஏற்றத் தினங்களில் மணமக்களுக்கு எண்ணெய் தேய்த்து குளிப்பாட்டுதல். மணமக்களுக்கும், தோழர், தோழியருக்கும் சீர் (உடைகள்) வழங்கல். கோயில் சென்று இறைவனை வணங்குதல். சம்பந்தி விருந்து முடித்தபின் (சம்பந்தம் கலத்தல்) மணமக்களை தனிவீடு வைக்க ஒழுங்குசெய்தல்.

## 8. பொது விடயங்கள்

8.01 திருமண பத்திரிகையில் இரு வீட்டாரினதும் குலதெய்வ பெயர்கள், மணமக்களின் குலங்கள், கவுண்டர் என்பன குறிப்பிடுதல் வேண்டும்.

8.02 அருமைக்காரர் அவர்களால் இணைச் சடங்கு முறைகளை இத்திருமணத்தின்போது செய்ய விரும்புகிறவர்கள் ஏற்ற ஒழுங்குகளைச்செய்து திருமணப் பத்திரிகையில் அதனை சேர்த்துக்கொள்வது சிறந்தது. மேலும் இவ் இணைச் சடங்குகளை முகூர்த்த நாளன்று காலையில் பரிசம் போட்ட பிறகு குருக்கள் சடங்குகள் தொடங்குவதற்கு முன்னரான இடைப்பட்ட நேரத்தில் அல்லது முகூர்த்தநாளுக்கு முந்தைய நாள் மாலை / இரவு வசதிக்கேற்றபடி செய்து கொள்ளலாம்.

8.03 அருமைக்காரர் / குடும்பப் பெரியவர் ஒருவரின் வழிகாட்டலில் சடங்கு முறைகள் நடைபெறும்.

8.04 நேர முகாமைத்துவம் மிக முக்கியமானது. மேலும் திருமண அழைப்பிதழில் குறிப்பிடப்பட்ட நேரத்திற்குள் தாலி கட்டுதல் முக்கியமானது. இதனை முன்னிற்பவர் வழிகாட்ட இரு குடும்பத்தாரும் ஒத்துழைக்க வேண்டும்.

8.05 தாலி கட்டுவதற்குமுன் மணமகனுக்கு தாய்மாமன் அல்லது மைத்துனரும் மணமகளுக்கு தாய்மாமனின் மனைவியான அத்தை அல்லது மைத்துனியும், தாலிகட்டியபின் மணமகனுக்கு மணப்பெண்ணின் சகோதரரும் மணமகளுக்கு மணமகனின் சகோதரியும் தோழர்களாக இருத்தல் வேண்டும்.



## 23. வீட்டில் செய்ய வேண்டியவை

இறந்த உடலைத் தூக்கிச்சென்ற பின் மருமகள் முறையானவர் மேஸ்திரி மாத்தைக் கட்டிக்கொண்டு வலது கையின் இரு பக்கமும் அரிசி எடுத்து பானையிலிட்டு வீட்டிற்கு வெளியே கஞ்சி வைத்தல். கொள்ளி வைத்தவர் வீடு வந்தவுடன் கஞ்சி சோறாக்கியவரே அதை கூரைக்குப் போடுதல்.

கொள்ளி வைத்தவருக்கு செஞ்சோறு சுற்றி என்ணெய் வைத்து குளிக்க வைத்து உரியவர்கள் வேட்டி கொடுத்து அதை அணியவைத்து வாசற்படியில் விபூதி பூசி, அவரை வீட்டினுள் அனுப்புதல். அவர் உள்ளே சென்று விளக்கைக் கும்பிட்டு விபூதியிட்டுக்கொள்ளல்.

குறிப்பு:

1. அன்றே கருமாதி செய்திருக்காவிட்டாலும் கொள்ளி வைத்தவருக்கு மேலுள்ள சடங்குகளைச் செய்தல்.

2. குழிக்கு பாலூற்றாவிட்டால் கொள்ளி வைத்தவர் தலைக்கு எண்ணெய் மட்டும் வைத்துக்கொள்ளக் கூடாது.

## 24. கருமாதி சடங்கு கூரைக்குச் சோறு

பங்காளி பெண்களால் சைவ உணவு படைக்கப்பட்டு அதனை நீர் விலாவி, சாம்பிராணி, சூடம் காட்டி பூசை செய்து பின் வெளியில் எடுத்து வந்து நீர் - சோறு - நீர் என கூரைக்குமேல் போடுதல். (ஒவ்வொருவரும் ஒரு முறை மட்டும்) அதன்பின் மேலுள்ளதுபோல் மகள்மார் மறுபிரால் போடுதல். அவர்களும் சைவ உணவை படைத்து அதனை நீர் விலாவி, சாம்பிராணி, சூடம் காட்டி பூசை செய்து பின் வெளியில் எடுத்து வந்து நீர் - சோறு - நீர் என கூரைக்குமேல் போடுதல். (ஒவ்வொருவரும் ஒரு முறை மட்டும்)

குறிப்பு:

1. கருமாதியை 1ம், 3ம் நாட்களில் அல்லது ஞாயிறு, புதன், வியாழன் ஆகிய தினங்களில் செய்வது உகந்தது.

2. சைவ உணவில் அகத்தி கீரை சோறு, சர்க்கரை சோறு, தயிர் சோறு சேர்த்துக்கொள்வது நல்லது.

## 25. கருவாட்டுச்சோறு

சிறு வயதினர் அற்ப ஆயுளில் இறந்தால் சிதையடக்கம் முடிந்து வீடு வந்தபின் இறந்தவரின் தாயார் குளித்து புத்தாடை உடுத்தி கருவாடு, கத்தரிக்காய் கறிச்சோற்றை வீட்டு வாசற்படியில் வைத்து 03 உருண்டைகளை வாயால் கவ்வி தள்ளிவிடுதல். ஆனால் உண்ணக் கூடாது.

6.14 ஓமஅக்கினி வளர்த்தல் - குருக்களால்

6.15 தாலி வைக்கப்பட்டுள்ள பூசைத் தட்டுடன் மணமகனை மேள வாத்தியங்களோடு பிள்ளையார் வழிபாட்டுக்கு அழைத்துச் செல்லல்.

6.16 பிள்ளையார் வழிபாடு முடிந்து திரும்பும் மணமகனுக்கு மண்டப வாசற்படியில் மணமகளின் சகோதரி அல்லது அவர்களது பங்காளி முறைப்பெண் மெட்டியிடும் இரு கால் விரல்களிலும் பால் தடவி, பொட்டிட்டு மெட்டி அணிவித்தல். தேங்காயால் இலேசாக மெட்டியை 3 முறை தட்டுதல். மணமகன் மெட்டியிட்டவருக்கு சீர் (பணம்) கொடுத்தல்.

6.17 மணப்பந்தலுக்கு மணமகள் அழைத்துவரப்பட்டு மணமகளின் தாயின் சகோதரர்களான தாய்மாமன்மாருக்கு விபூதி, பொட்டு வைத்து பால், பழம் கொடுத்தல். (மாமன் மகன், அத்தைமார் இதில் பங்கேற்க வாய்ப்பில்லை)

6.18 தாய் மாமன் மணமகளுக்கு விபூதி, பொட்டு வைத்து நெற்றிப்பட்டம் கட்டி மாலை அணிவித்தல். பின் மணமகள் தாய்மாமனிடம் ஆசீர்வாதம் பெற்று சீர் (வேட்டி) வழங்குதல். ஏனைய தாய்மாமன்மார் இருப்பின் அவர்களும் மணமகளுக்கு விபூதி, பொட்டு வைத்து ஆசீர்வதித்தல். அவர்களுக்கும் சீர் (வேட்டி) வழங்கல். (மாமன்மகன், அத்தைமார் இதில் பங்கேற்க வாய்ப்பில்லை)

6.19 ஓமஅக்கினி வளர்த்தல் - குருக்களால்

6.20 சம்பந்தம் கலத்தல். ஆண் சம்பந்திகள் அமர்ந்தும், பெண் சம்பந்திகள் அவர்கள் அருகில் நிற்க, இரு ஆண் சம்பந்திகளும் மாறி மாறி பன்னீர் தெளித்து விபூதி, பொட்டிட்டு இரு கைகளுக்கும் சந்தனம் பூசி மாலை அணிவித்துக்கொள்ளல். பெண் சம்பந்திகளும் மாறி மாறி பன்னீர் தெளித்து விபூதி, பொட்டிட்டு தலையில் பூ வைத்துக்கொள்ளல்.

6.21 ஆண் சம்பந்திகள் வெற்றிலை, பாக்கு, மஞ்சள், சில்லறைக்காசுடன் 03 முறை மாற்றிக்கொண்டபின் தங்கள் மனைவியிடம் கொடுத்தல்.


6.22 மணமகனும் தொடர்ந்து மணமகளும் பெற்றோருக்கு பாத பூசை செய்து ஆசீர்வாதம் பெறுதல். பெற்றோரில் ஒருவரோ அல்லது இருவருமோ இல்லாவிடின் தந்தைவழி பங்காளித் தம்பதிகள் பெற்றோர் கடமைகளைச் செய்வர். பெற்றோரில் ஒருவர் மட்டும் இருப்பின் அவர்களுக்கும் அடுத்து பாத பூசை செய்தல்.

6.23 மணமகளை தாரைவார்த்து கொடுத்தல். தாய்மாரிடம் உள்ள வெற்றிலையை மணமக்களின் கைகளில் வைத்து அதில் 25 சதம் சாசு வைத்து நீரூற்றி அதனை மணமகனுக்கு தாரைவார்த்துக்கொடுத்தல்.

6.24 தேங்காயுடன் தாலி வைக்கப்பட்டுள்ள மங்கல தட்டில் சூட தீபத்துடன் சபையோரின் ஆசிபெற மணமகனின் தாய்மாமனால் எடுத்துச்செல்லல். தொடர்ந்து மணமகளின் தாய்மாமனால் மஞ்சள் கலந்த அரிசி, பூக்களுடன் கூடிய அட்சதையை மணமக்களை ஆசீர்வதிப்பதற்காக கொடுக்கப்படும்.



## இல்லத்திலிருந்து உலகத்திற்கு




**இல்லத்தில் இசைவு**
**இனத்தின் இணைவு**
**சமூகத்தில் சுமுகம்**
**ஊருடன் உறவு**
**நாட்டுடன் நட்பு**
**உலகத்துடன் உயர் மகிழ்வு**
**என மனித நேய வாழ்வை அமைக்க**
**அகில இலங்கை கொங்கு வேளாளர் ஒன்றியம்**
**அரும் பணியாற்றும்.**

***வாழ்க வளமுடன்!***

5. **பரிசம் ( மண்டபத்தில்)**

(பரிசம் போடுதல் விரும்பினால் திருமண நாளுக்கு முன்பு மணமகள் வீட்டிலும் வைக்கலாம்)

5.01 மணமகள் வீட்டார் மண்டபத்தில் பாய், குத்துவிளக்கு, நிறை செம்பு, விபூதி, சந்தனம், குங்குமம், பன்னீர், சூடம் ஆசியவற்றை ஒழுங்குபடுத்தல்.

5.02 மணமகன் வீட்டார் சீர் தட்டு, பரிச சேலை, கொண்டைமாலை ஆகியவற்றுடன் ஏனைய தட்டுகளையும் சபைக்கு கொண்டுவருதல்.

5.03 அருமைக்காரர் / பெரியவருக்கு வலது பக்கம் மணமகன் வீட்டாரும், இடது பக்கம் மணமகள் வீட்டாரும் அமர்தல்.

5.04 மணமகன், மணமகள் சம்பந்தமாக பெரியவர்கள் கலந்து பேசி தாய் மாமன் சம்மதத்துடன் பரிச பணம் ரூபா 11.25 ஐ மஞ்சள் நீரில் தோய்த்த துணியில்வைத்து முடிதல்.

5.05 அருமைக்காரர் இல்லாதவிடத்து மணமகனின் தாய் நீர் விலாவி, சூடம் காட்டி பூசை செய்து பின் மணமகளின் தாய் தீபத்தைக் கும்பிட்டுக்கொள்ளல்.

5.06 இரு தாய் தந்தையரும் மாறி மாறி விபூதி, பொட்டு வைத்துக்கொள்ளல்.

5.07 நிறை செம்பை மணமகனின் தாயார் மணமகளின் தாயாரிடமும் சீர் தட்டு, பரிச சேலையை மணமகனின் தாய், தந்தையர் இணைந்து மணமகளின் தாய், தந்தையரிடம் கொடுத்தல்.

5.08 பெரியவர்கள் 05 பேருக்கு (இரு வீட்டாருக்கும்) வெற்றிலை, பாக்கு, மஞ்சள் ஆகியவற்றை குடும்பப் பெரியவரால் கொடுத்தல்.

5.09 மணமகள் அழைத்து வரப்பட்டு குத்து விளக்கை விழுந்து கும்பிட்டு பெற்றோர்கள் உட்பட பெரியவர்களிடம் ஆசீர்வாதம் பெறல். (பரிச சேலையை அந்நேரம் உடுத்தத் தேவையில்லை) வருகை தந்துள்ளவர்களுக்கு கற்பூரம் காட்டி, விபூதி கொடுத்து இனிப்பு வழங்கல்.

5.10 குத்து விளக்கு முன்னே செல்ல மணமகளை நிறை செம்பு, சீர் தட்டுகளுடன் அழைத்துச் செல்லல்.

6. **மணப்பந்தல் நிகழ்வுகள்** (குருக்கள் அவர்களுடன் இணைந்து)

6.01 மணமகன் வீட்டார் முளைப்பாரியுடன் மணவறை வந்தபின் இரு வீட்டாரும் கலந்து குத்து விளக்கேற்றல்.



# மங்கல வாழ்த்து!

## கம்பர் பாடியது

**"நல்ல கணபதியை நாளும் நாம் தொழுவதால்**
**அல்லல் வினையெல்லாம் மாளுமே – சொல்லரிய**
**தும்பிக்கை யோனைத் தொழுதால் வினை தீரும்**
**நம்பிக்கை உண்டே நமக்கு"**

அகவல்பா **– வெண்பா –**

அலைகடல் அமிர்தம் ஆரணம் பெரியவர்
திங்கள் மும்மாரி செல்வம் சிறந்திட
கந்தன் இந்திரன் கரிமா முகத்தோன்
சந்திரர் சூரியர் தானவர் வானவர்
முந்திய தேவர் மூவருங் காத்திட
நல்கலி யாணம் நடத்திடும் சீர்தனில்
தப்பிதம் இல்லாமல் சரஸ்வதி காப்பாய்
சீரிய தினைமா தேனுடன் கனிமா
பாரிய கதலிப் பழமுடன் இளநீர்
சர்க்கரை வெல்லம் தனிப்பலாச் சுளையும்
மிக்கதோர் கரும்பு விதவிதகிழங்கு
எள் அவல் நற்பொரி இனித்த பாகுடன்
பொங்கல் சாதம் பொரிகறி முதலாய்
செங்கையினாலே திரட்டிப் பிசைந்து
ஆரமுது அருந்தும் அழகு சிறந்த
பேழை வயிற்றுப் பிள்ளை கணபதியே
அடியேன் சோதனை அவனியில் குறித்துக்
கடுகியே வந்தேன் கருத்தினிலே நின்று

நினைத்த தெல்லாம் நீயே முடித்து
மனத்துயர் தீர்ப்பாய் மதகரி சரணம்
மங்கல வாழ்த்தை மகிழ்ச்சியாய் ஓத
என் குரு நாதன் இணையடிபோற்றி
கிரேதா திரேதா துவாபரம் கலியுகம்
செம்பொன் மகுடம் சேரன் சோழன்
பாரமா முடியும் பாண்டியன் என்னும்
மூன்று ராஜாக்கள் ராஜ்யம் ஆளுகைகளில்
கருவுரு வாகித் திருவதி அவள் புகழ்
சிறந்த மானிடம் தாயது சுத்தம்
வாழ்வது பொருந்தி சிறந்திடுங்காலம்

இந்திரன் தன்னால் இங்கு வந்த நாளில்
பக்குவ மாகிப் பருவங்கொண்டு
திக்கில் உள்ளோர் பலருங் கூடி
சோதிடர் அழைத்து சாத்திரங் கேட்டு
இந்த மாப்பிள்ளை பேர்தனைக் கூறி
இந்த பெண்ணின் பேர்தனைச் சொல்லி
இருவர் பேரையும் ராசியில் கேட்டுக்
கையில் ஓடிய ரேகைப் பொருத்தம்
ஒன்பது பொருத்தம் உண்டெனப் பார்த்துத்

திருமணச் சடங்குகள்

## 1. நிச்சயதார்த்தம்

1.01 மணமகள் வீட்டில் பாய், குத்து விளக்கு, நிறை செம்பு, விபூதி, பன்னீர், சந்தனம், குங்குமம், சூடம் ஒழுங்குபடுத்துதல்.

1.02 மாப்பிள்ளை வீட்டார் உறுதி நகை (வசதிக்கேற்ப) வைத்துள்ள ஒரு சீர் தட்டை சபைக்கு கொண்டுவருதல்.

1.03 அருமைக்காரர் / பெரியவருக்கு வலது பக்கம் மணமகன் வீட்டாரும், இடது பக்கம் மணமகள் வீட்டாரும் அமர்தல்.

1.04 மணமகன், மணமகள் விபரங்களை பெரியவர்கள் கலந்து பேசி தாய்மாமன் சம்மதத்துடன் அனைவரும் ஏற்றுக்கொள்ளல்.

1.05 அருமைக்காரர் இல்லாதவிடத்து மணமகனின் தாய் சீர் தட்டு, விளக்கு ஆகியவற்றிற்குப் பூசை செய்தல். மணமகளின் தாய் தீபத்தை கும்பிட்டுக்கொள்ளல். பின் இரு வீட்டுத் தாய் தந்தையரும் மாறி மாறி விபூதி, பொட்டு வைத்துக்கொள்ளல்.

1.06 நிச்சயப்பத்திரிக்கை வாசித்தல்.

1.07 நிறை செம்பை மணமகனின் தாயார் மணமகளின் தாயாரிடமும், சீர் தட்டை மணமகனின் தாய், தந்தையர் இணைந்து மணமகளின் தாய், தந்தையரிடம் கொடுத்தல்.

1.08 நிறை செம்பு, சீர் தட்டுடன் மணமகளை சபைக்கு அழைத்து வருதல். மணமகள் குத்துவிளக்கையும், பெரியவர்களையும் விழுந்து கும்பிட்டபின், மணமகனின் சகோதரி அல்லது பங்காளி முறை சகோதரி மணமகளுக்கு விபூதி வைத்து, பொட்டிட்டு, மலர் சூடி உறுதி நகையை அணிவித்தல்.

1.09 தாய் தந்தையர், தாய் மாமன் அத்தைமார், பெரியவர்கள் மணமகளுக்கு விபூதி வைத்து வாழ்த்துதல்.

1.10 வருகை தந்த ஏனையோருக்கு விபூதி, பொட்டு, இனிப்பு கொடுத்தல்.

1.11 குத்துவிளக்கு முன்னே செல்ல மணமகளை நிறை செம்பு, சீர் தட்டுடன் உள்ளே அழைத்துச் செல்லல்.

## 2. வீட்டில் முகூர்த்தக்கால் நடல்

2.01 பால் மரமொன்றின் கிளைகள் மூன்றுடன் கூடிய முகூர்த்தக்கால் மரத்தை பட்டை உரித்து, மஞ்சள் பூசி வைத்திருத்தல். மஞ்சள் பிள்ளையார் உட்பட பூசைப்பொருட்களை ஒழுங்குபடுத்தல். முகூர்த்தக்காலுடன் மாங்கொத்து, பட்டு சேர்த்து கட்டி பூச்சரம் போடுதல்.



அருகது சூடி அருள்பொழிந் திடவே
நிரம்பிய தாகவே நிறைநாழி வைத்து
வெற்றிலை பழமும் விருப்புடன் வைத்து

அலைகடல் அமிழ்தம் அவனியின் நீரும்
குழவிக்கும் கங்கணம் குணமுடன் தரித்து
களரியோர் மெச்சிடக் காப்பது கட்டி
குப்பாரி கொட்டி குலதேவதையை
தானழைத்து செப்பமுடன் திருநீறு காப்பணிந்து
சாந்து சந்தனம் தண்ணீரும் பன்னீரும்
சேர்த்துக் கலக்கிச் சிறக்கவே பூசி
கொத்தரளி கொடியரளி கோத்திர நல்லானி
முல்லை இருவாச்சி முனைமுறியாச் செண்பகப்பூ
நாரும் கொழுந்தும் நந்தியா வட்டமும்

வேரும் கொழுந்தும் வில்வ பத்திரமும்
மருவும் மரிக்கொழுந்தும் வாடாத புட்பங்களும்
புன்னை கொன்னை பூக்கள் எல்லாம்
கொண்டு வந்து கொண்டை மாலை,
தண்டை மாலை சோபன சுடர்மாலை
ஆடை ஆபரணம் அலங்காரம் மிகச் செய்து
திட்டமுடன் பேழைதனில் சோறு நிறை
நாழி வைத்து நட்டு முட்டுத் தான் முழங்க
நாட்டார் சபை தனக்கு
நன்றாய் வலம் வந்து நலமாக நிற்கையிலே

செஞ்சோறு ஐந்து அடை சிரமதைச் சுற்றியே
திட்டி கழித்துச் சூரியனைக் கைதொழுது
அட்டியெங்கும் செய்யாமல் அழகுமனைக்கு வந்து
மணவறை அலங்கரித்து மன்னவரைத் தானமர்த்தி
இணையான தங்கையாரை ஏந்திழையாள் தானழைத்து
சந்தனம் புனுகு சவ்வாது மிகப்பூசி
மந்தாலை மல்லிகை மருக்கொழுந்து மாலையிட்டு
ஆடை ஆபரணம் அழகுபெறத் தான்பூண்டு
கூறை மடித்துவைத்துக் குணமுள்ள தங்கையரும்
பேழைதனை இறக்கிவைத்து பிறந்தவளை அதில் நிறுத்தி

கூறை சேலை ஒரு தலைப்பை கொப்பனையாள் கைபிடித்து
மாப்பிள்ளை கக்கத்தில் மறுமுனையைத் தான் கொடுத்து
அருமைப் பெரியோர்கள் அழகு மாப்பிள்ளை கைப்பிடித்து
அரிசியில் பதியவைத்து ஐங்கரனுக்குப் பூசை செய்து
மங்கல வாழ்த்துக்கூற மணவறையில் குடிமகனுக்கு
செய்கையால் அரிசியள்ளி சிறக்கக் கொடுத்திடுவார்
குடிமகன் மங்கலவாழ்த்து கூறிமுடித்தவுடன்
வேழ முகத்து விநாயகர் தாள்பணிந்து
சந்திரரும் சூரியரும் சபையோர்கள் தானறிய
இந்திரனார் தங்கை இணையோங்க வந்தபின்பு

மேலும் ‘‘சடங்கு முறைகள் பொதுவாக்கல்’’ என்ற இந்நூல் வெளிவருவதற்கு நமது கொங்கு வேளாளர் ஒன்றியத் தலைவர் திரு. என். பாலசுந்தரம் கவுண்டர் அவர்களின் வழிநடாத்தல் மிக முக்கியமானது. ஓய்வாக இருக்க வேண்டிய நிலையிலும் சடங்கு முறைகளில் நம்மினம் ஒன்றுபடல் வேண்டும் என்ற குறிக்கோளுடன் இப்பணியினை அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அவருக்கு அனைவரின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி.
வாழ்க வளமுடன்!
என்றும் பணியில்,
வேலுசாமி கருணாகரன் கவுண்டர்.

அகில இலங்கை சமாதான நீதவான். ஓய்வு நிலை உதவி கல்விப் பணிப்பாளர்
தலைவர் - கொங்கு வேளாளர் சங்கம், பண்டாரவளை
இணைப்பாளர் - அகில இலங்கை கொங்கு வேளாளர் ஒன்றியம்
இல.08, சீவலி வீதி, பண்டாரவளை, இலங்கை.



முத்துச்சரம் பணி மோக மாலைகளும்
திட்டமுள்ள மங்கையர்க்கு திருப்பூட்டப் போறோமென்று
அட்டதிக்கு தானதிர அடியுமென்றார் பேரிகையை
அன்ன நடையாரும் அருமை பெரியவரும்

பொன்னு வளையல் கையால் பேழைமுடி தான் சுமந்து
இன்னும் சில பெண்கள் இவர்களைச் சூழ்ந்துவர
சென்று உட்புகுந்தார் திருப் பெண்ணாள் மாளிகையில்
நாட்டிலுள்ள சீர்சிறப்பு நாங்கள் கொண்டு வந்தோமென்று
கொண்டு வந்த அணிகலனைக் கோதையர்க்கு முன்வைக்க
கண்டு மகிழ்ந்தார்கள் கன்னியர்கள் எல்லோரும்
பூட்டினார் தோடெடுத்து பொன்னாள் திருக்காதில்
தங்கச் சங்கிலிதனை கழுத்தில் இட்டார்கள்
அடைக்காயும் வெற்றிலையும் அன்பாக மடியில்கட்டி
ஆணிப் பெண்ணவனை அலங்கரித்துக் குலங்கோதி

சாந்து பொட்டிட்டு சவ்வாது மிகப்பூசி
ஊட்டுமென்றார் சாதம் உடுத்துமென்றார் பட்டாடை
பொன்பூட்ட வந்தவற்குப் பூதக்கலம் தான்படைத்து
அன்பாக வெற்றிலை அடைக்காயும் தான் கொடுத்தார்
தாய்மாமன் தன்னை தன்மையுடன் அழைத்து
சந்தனம் மிகப்பூசி சரிகைவேட்டி தான் கொடுக்கப்
பொட்டிட்டுப் பொன்முடிந்து பேதை மயிலியர்க்குப்
பட்டமும் கட்டினார் பாரிலுள்ளோர் தானறிய
ஆரணங்குப் பெண்ணை அலங்காரம் மிகச்செய்து
மாமன் குடைபிடித்து மாநாட்டார் சபைக்கு வந்து

வலமதாய் வந்து நலமதாய் நின்று
செஞ்சோறு ஐந்து அடை சிரம்கால் தோளில் வைத்து
நிறைநாழி சுற்றியே நீக்கித் திட்டிக் கழித்து
அட்டியங்கள் செய்யாமல் அழகு மனைக்கு வந்து
மங்கல கல்யாணம் செய்ய மணவறை அலங்கரித்து
அத்தியொரு துத்திப்பட்டு அனந்த நாராயணப்பட்டு
பஞ்சவண்ண நிறச்சோலை பவள வண்ணக் கண்டாங்கி
மாந்துளிச்சேர் பூங்கொத்து வண்ணமுள்ள பட்டாடை
மேலான வெள்ளைப்பட்டு மேற்கட்டுங்கட்டி
கட்டியே இருக்கும் கடைபெரிய வாசலிலே

அருமையுள்ள வாசலிலே அனைவரும் வந்திறங்கிப்
பெருமையுள்ள வாசல்தனைப் பூவால் அலங்கரித்து
சேரர் சோழர் ராசாக்கள் சேர்ந்திருக்கும் வாசலிலே
செம்பொன் மிகுந்தோர்கள் சிறந்திருக்கும் வாசலிலே
வீர இலக்குமி அவள் விளங்கிடும் வாசலிலே
விருதுகள் வழங்கிடும் விருப்பமுள்ள வாசலிலே
தரணியில் அன்னகொடி கட்டிய வாசலிலே
நாற்கரசு நாட்டி நல்ல முகூர்த்தமிட்டுப்
பேய்க் கரும்பை நாட்டிப் பிறைமண்ணும் தான் போட்டு

இதில் குறிப்பிட்டுள்ள சடங்கு முறைகளில் தற்போது சில இடங்களில் இடம்பெறும் முறைகளைச் சேர்க்க விரும்பினாலும் எவ்வித ஆவணங்களும் கிடைக்காததால் நாங்கள் அவைகளை இணைத்துக்கொள்ள முடியவில்லை. எனினும் அனைவருக்கும் சந்தர்ப்பம் கொடுத்து சடங்கு முறைகளை மேலும் செம்மைப்படுத்த வழி வகுத்துள்ளோம்.

என்னுடன் மிகப் புரிந்துணர்வுடனும், நெருக்கமாகவும், பூரணமாக ஒத்துழைத்த இணைப்பாளர்களான மருமக்கள் திரு. வே. கருணாகரன் கவுண்டர் (தலைவர், கொங்கு வேளாளர் சங்கம்- பண்டாரவளை) திரு. ஜெ. நிரோஷ்காந்த் கவுண்டர் (செயலாளர் -கொங்கு வேளாளர் சங்கம், கொழும்பு) ஆகிய இருவரோடு ஏனைய அனைத்து செயற்குழு அங்கத்தவர்களுக்கும் எனது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்வதில் பேரானந்தம் அடைகின்றேன். இதற்கான குழு கூட்டங்கள் நடைபெற்றபோது மண்டபத்தை இலவசமாகவும், ஏனைய உபசரிப்புகளை தங்களின் சொந்த செலவிலேயே ஏற்றுக்கொண்ட ஹட்டன் மன்ற செயலாளர் திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி கவுண்டர், உப தலைவர் திரு. கே. பாலசுப்ரமணியம் கவுண்டர் ஆகியோருக்கும், இதேபோல பண்டாரவளையில் ஏற்பாடு செய்த அதன் ஆலோசகர் திரு. கே. குமாரவேல் கவுண்டர், கொழும்பில் ஒழுங்கமைத்த திரு. எஸ். தங்கராஜா கவுண்டர், ஆரம்பம் முதல் ஊக்கமளித்த ஹட்டன் ஆலோசகர் திரு. கே. ராமசாமி கவுண்டர் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சடங்குகள் பொதுவாக்கல் என்ற விடயத்திற்காக உருவான அகில இலங்கை கொங்கு வேளாளர் ஒன்றியம் மேலும் விரிந்து கொங்கு வேளாளர்களின் குலதெய்வ வழிபாடு, பண்பாடு, கலாசாரம், கல்வி, விளையாட்டு என்பனவற்றைப் பேணுவதோடு “இல்லத்திலிருந்து உலகத்திற்கு” என்ற வகையில் அனைத்து சமய, இன மக்களுடனும் உலகளாவிய நிலையில் இணைந்து வாழும் பண்பைப் பெற்றுக்கொள்ளவும் வழி சமைக்க அனைவரும் பாடுபடுவோம்.

வாழ்க வளமுடன்.

என்றும் சேவையில்,
நல்லையன் பாலசுந்தரம் கவுண்டர்.
அகில இலங்கை சமாதான நீதவான்.
ஓய்வு நிலை உதவி கல்விப் பணிப்பாளர்
தலைவர் - அகில இலங்கை கொங்கு வேளாளர் ஒன்றியம்
(சடங்குகள் பொதுவாக்கல்)
65, டன்பார் வீதி, ஹட்டன், இலங்கை.
19.01.2020



உரிக்காசுப் பணம் உயர்ந்த தேவராயர் பொற்காசு
ஒருவிழி விழிக்க ஒருவிழி பிதுங்க
பலவகை நாணயமும் பாங்காய் தெரிந்து

முன்னூறு பொன்முடிப்பு ஒன்றாய் முடிந்தவுடன்
பாட்டன் இருந்து பரியம் செலுத்தினார்
பந்தல் கௌளி பாக்கியம் உரைக்க
மச்சினன் மார்கள் மகிழ்ந்து சூழ்ந்திருக்க
சிற்றாடைப் பெண்கள் சிறு சீர்கள் சுமந்துவர
சந்தோஷமாகித் தங்கமுடி மன்னவர்கள்
பந்தச்செலவு பலபோக்கும் ஈந்தார்கள்
ஆடுவான் பாடுவான் ஆலாத்திக்குட்படுவான்
நாடி வந்த போர்களுக்கு நல்ல மனதுடனே
தனிப்பணம் தான் கொடுத்து தங்கி இருமென்றார்

வாழிப் புலவர்க்கு வரிசைதனைக் கொடுத்து
திடமுள்ள பந்தலின் கீழ்வந்து நின்ற போர்களுக்கு
அரிசி அளந்தார்கள் அனைவோரும் தானறிய
கரகம் இறக்கிவைத்துக் கன்னி மணவாளனுக்கு
புடவைதனைக் கொடுத்துப் பின்னும் தலைமுழுகி
சுட்டுவச் சாதம் பெண் தளிர்க்கரத்தால் மாப்பிள்ளைக்கு
சாதம் பரிமாறி சாப்பிட்டு ஆனவுடன்
பண்ணையத்து மாதிகளைப் பண்பாகத் தானழைத்து
வில்லை மிதியடிகள் மிகவே தொட்டபின்பு
காலும் வழங்கிக் கன்னியைத் தானழைத்து

மஞ்சள் நீராடி மறுக்க இரு அழைப்பழைத்து
மாமன் மார்களுக்கு மகத்தான விருந்து வைத்து
மங்கல சோபனம் வகையாய் முடிந்தவுடன்
மாமன் கொடுக்கும் வரிசைதனைக் கேளீர்
தூயபட்டுச் சால்வை சோமன் உருமாலை
பஞ்சவண்ணக் கண்டாங்கி பவளநிறப்பட்டு சேலை
அத்தியடி துத்திப்பட்டு ஆனையடிக் கண்டாங்கி
இந்திர வண்ணப்பட்டு ஏகாந்த நீலவண்ணம்
முறுக்கு வளையல்களும் முகமுள்ள கொலுசுகளும்
பதக்கம் சரப்பணி பகட்டான காசுமாலை

கட்டிலும் மெத்தையும் காளாங்கி தலையணையும்
வட்டில் செம்பும் வழங்கும் சாமான்களும்
காளை வண்டியும் கன்றுடன் பால்பசுவும்
குதிரையுடன் பல்லாக்கு குறையாத பலபண்டம்
நிறையக் கொடுத்தார்கள் நேயத்தார் தானறிய!

**முக்கிய வேண்டுகோள்.....**

**இனம் இணைய இதமான வேண்டுகோள்**

இனிய சொந்தங்களே!

தற்போது இலங்கையிலுள்ள பண்டாரவளை, ஹட்டன், கொழும்பு கொங்கு வேளாளர் அமைப்புகளின் குழுவினர் இணைந்து , தமிழ்நாட்டின் கொங்கு வரலாற்று ஆய்வாளர்களின் ஆவண நூல்கள், கம்பர் எழுதிய கொங்கு மங்கல வாழ்த்துப் பாடல் ஆகியவற்றையும், ஏனைய பகுதிகளில் வாழும் நமது சொந்தங்கள், பெரியோர்களின் கருத்துக்களையும் அடிப்படையாகக்கொண்டு கலந்துரையாடி இச்சடங்கு முறைகளின் தொகுப்பு நூல் முன்மொழியப்படுகின்றது.

இதுவரை நமது சடங்கு முறைகளை நம்மில் சிலர் முன்னெடுத்து செய்வதன் காரணமாகவே அவை பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கின்றோம். சில சடங்குகள் இடத்திற்கு இடம் மாறியிருப்பதால் அவைகளையும் ஒரே முறையில் செய்யவே பெரு முயற்சியெடுத்துள்ளோம். தற்போது நமது முன்னோர்கள் பற்றி ஏனைய இலக்கிய நூல்களிலும் இந்திய ஆய்வாளர்களினால் அரிய பொக்கிஷங்களான நூல்களிலிருந்தே இத்தொகுப்பு நூல் ஆக்கப்பட்டுள்ளது.

மங்கல, அமங்கல சடங்கு முறைகள் தெளிவாக இந்நூல் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. சகல நம் சொந்தங்களும் இதனை பொதுவாக ஏற்று உடனடியாக அமுலாக்கும் வண்ணம் எல்லா இடங்களிலும் ஒரே முறையிலான சடங்கு முறைகளை பின்பற்றுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம். அனைத்து அங்கத்தவர்களின் பங்களிப்புடன் திருத்திய பதிப்பு வரும்வரை இத்தொகுப்பு நூலின் முறையிலேயே சடங்குகளை மேற்கொள்வது நமது இனத்திற்கு அனைவரும் இணைந்து செய்யும் மாபெரும் தொண்டாகும்.

அடுத்த வெளியீட்டில் உங்களிடமிருந்து உரிய ஆவணத்துடன் திருத்தங்கள் கிடைத்தால் அவைகளையும் கலந்துரையாடி ஏற்றவற்றை இணைத்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்துள்ளோம். அத்துடன் "பூப்புனித நீராட்டு", "எழுதிங்கள் சீர்" (எழுதிங்கு சீர்), "அருமைக்காரரால் நடாத்தப்படும் திருமணம்" பற்றிய பூரண விளக்கங்களைப் பெற்று அடுத்த பதிப்பில் இணைத்துக்கொள்ள ஒழுங்கு செய்துள்ளோம் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்விடயத்திலும் தங்களின் மேலான பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் மங்கலகரமான பொது வைபவங்கள் ஏற்பாடு செய்யும் பொழுது கொங்கு வேளாளர்களின் பண்பாடு, கலாசாரம் பின்பற்றப்படுவது நமது இனம் பற்றிய பெருமையைப் பேணி காக்கும் செயலாகும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

-தொகுப்பு நூலாக்கக் குழுவினர்-



கொங்கு வேளாளர் குலம் அல்லது கூட்டப் பெயர்கள் விபரம்

கொங்கு வேளாளர் குடிமக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்து பறவை, தாவரம், குண இயல்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பெயரிட்டதன்படி ஆரம்பத்தில் 60 பிரதான குலங்கள் இனங்காணப்பட்டன. ஆனால் கிடைக்கப் பெற்ற சில நூல்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்யும்போது மேலும் பல குலப்பிரிவுகள் இருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறு கிடைக்கப் பெற்ற நூல்களிலிருந்து பின்வரும் 167 குலங்கள் இனங்காணப்பட்டன. ஒரே பெயர் மருவி வேறு பெயர்கள் உருவாக்கப்பட்டு விட்டதோ என்ற சந்தேகமும் ஏற்படுகின்றது. இப்பெயர்கள் மேலும் ஆராயப்பட்டால் இன்னும் சில மாற்றங்கள் ஏற்படலாம் எனத் தோன்றுகின்றது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | அந்துவன் | 21 | ஓதாளன் | 41 | குயிலர் |
| 02 | அனகன் | 22 | கண்ணன் | 42 | குழையர் |
| 03 | அக்கினி | 23 | கணக்கர் | 43 | குணியன் |
| 04 | அழகு | 24 | கண்ணந்தை | 44 | குண்டரி |
| 05 | அவரியன் | 25 | கவளன் | 45 | குங்கிலி |
| 06 | அழகன் | 26 | கம்பன் | 46 | கும்பன் |
| 07 | ஆதி | 27 | கட்டுசெவியன் | 47 | கூறை |
| 08 | ஆதி அந்தம் | 28 | களிஞ்சி | 48 | கூறபன் |
| 09 | ஆந்தை | 29 | கவுரி | 49 | கொட்டாரன் |
| 10 | ஆடர் | 30 | கணவாளன் | 50 | கொண்டிரங்கி |
| 11 | ஆவன்/ ஆவின் | 31 | கருங்கண்ணன் | 51 | கோவேந்தர் |
| 12 | ஆடை | 32 | கடுந்துளி | 52 | கோதனு |
| 13 | ஆதினன் | 33 | கல்லி | 53 | கோரக்கன் |
| 14 | ஆதித்தேயன் | 34 | காடை | 54 | கோவார் |
| 15 | இந்திரன் | 35 | காரி | 55 | சன் |
| 16 | ஈச்சன் | 36 | காடன் | 56 | சவுரியன் |
| 17 | உவணன் | 37 | காடர் | 57 | சனகன் |
| 18 | உழுவார் | 38 | கிள்ளியன் | 58 | சங்கர் |
| 19 | எண்ணெய் | 39 | கீரை | 59 | சாத்தந்தை |
| 20 | ஒழுக்கர் | 40 | கீரன் | 60 | சாத்துவராயன் |

☆சீதேவி வாங்குதல் 20
☆இளம் வயதினர் இறப்பு 20
☆வாய்க்கரிசி 20
☆ஆண் இறந்தால் 21
☆பெண் இறந்தால் 21
☆சிறு பிள்ளைகள் இறந்தால் 21
☆சிதை எடுத்தல் 21
☆பாடை மாற்றுதல் 21
☆சிதை அடக்கம் 21
☆கொல்லிக் குடம் உடைத்தல் 22
☆எரித்தல் 22
☆இழவு காணல் 22
☆சாம்பல் எடுத்தல் 22
☆கங்கையில் கரைத்தல் 22
☆வீட்டில் செய்யவேண்டியவை 23
☆கருமாதி, கூரைக்கு சோறு 23
☆கருவாட்டுச் சோறு 23
☆உணவு அருந்துதல் 24
☆புண்ணியதானம், மோட்ச விளக்கு 24
☆சோறாக்கிப் போடல் 24



| | | |
|---|---|---|
| **நூல்** | : | **கொங்கு வேளாளர் சடங்கு முறைகள்** |
| **ஆசிரியர்கள்** | : | **திரு. ந. பாலசுந்தரம் கவுண்டர்<br>திரு. வே. கருணாகரன் கவுண்டர்<br>திரு. ஜெ. நிரோஷ்கரந்த் கவுண்டர்** |
| **வெளியீடு** | : | **அகில இலங்கை கொங்கு வேளாளர் ஒன்றியம்** |
| **திகதி** | : | **09.02.2020** |
| **பக்கங்கள்** | : | **40** |
| **கணினி** | : | **காளிமுத்து கருணாகரன்** |
| **அச்சுப்பதிப்பு** | : | **யுனிவர்சல் அச்சகம், ஹட்டன்.**<br>051-2222911 |




# கொங்கு நாடு

கொங்கு என்பதன் பொருள் தேன். குறிஞ்சி வளமும், முல்லை நிலமும் சேர்ந்தே கொங்கில் தேன் மிகுந்த சிறப்பால் இது கொங்கு நாடு எனப்பட்டது. “கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி” (குறுந்-1) என்ற இறையனார் பாடலில் கொங்கு என்பதைத் தேன் என அறியலாம். இதே பொருளை “கொங்கு கவர் நீலம் செங்கண் சேவல்” என சிறுபானாற்றுப்படையும் (சிறு.184), “கொங்குமுதிர் நறுவழை” என குறிஞ்சிப்பாட்டும் (குறிஞ்.83) கூறுகின்றன.

கொங்கு நாடு சங்க காலத்திலேயே சிறப்புடன் விளங்கியது. சேரர் ஆட்சியில் நெடுங்காலம் இருந்தது. சோழர், பாண்டியர்களும் ஆண்டுள்ளனர். கரிகாலன் கொங்கு நாட்டை காடு கெடுத்து நாடாக்கினான். கொங்கு நாட்டு மக்களை வைத்தே கல்லணை கட்டினான். கிள்ளி வளவனைப் பாடிய கோவூரி கிழார் “கொங்குபுறம் பெற்ற கொற்றைவேந்தே” (புற.373) என்று பாடியுள்ளான்.

சோழ அரசன் தனது மேலான இறை பக்தியின் அடையாளமாக தஞ்சை பெருங் கோயிலைக் கட்டும் பொழுது அதன் கோபுரத்தின் மேலுள்ள பாரிய கல்லை நுணுக்கமாக வைக்கும் திறன் கொங்கு மக்களிடம் தான் இருக்கின்றது என எண்ணி அப்பொறுப்பை கொங்கு மக்களிடம் கொடுத்த வரலாறும் உள்ளது.

சோழ ஆட்சியின்போது தனது நாட்டினை ஏழு மண்டலங்களாகப் பிரித்தபோது கொங்கு நாட்டைத் தனி மண்டலமாகப் பிரித்து அதற்கு அதிராச மண்டலம் எனப் பெயரிட்டான். கொங்கு மண்டல சாதகத்தை எழுதிய கார்மேகங்கோனார் காலத்தில் இது கொங்கு மண்டலம் என்றே இருந்தது.

கொங்கு நாடுகள் 24 இருந்தன. சேலம், கோவை, ஈரோடு, நாமக்கல், தர்மபுரி, கரூர் ஆகியன கொங்கு நாட்டு மாவட்டங்களாகும்.

| | | | |
|---|---|---|---|
| 01 | பூந்துறை நாடு | - | ஈரோடு, திருச்செங்கோடு |
| 02 | தென்கரை நாடு | - | கரூர், தாராபுரம் |
| 03 | காங்கேய நாடு | - | தாராபுரம், காங்கேயம் |
| 04 | பொங்கலூர் நாடு | - | பல்லடம், தாராபுரம் |
| 05 | ஆறை நாடு | - | கோவை, அவினாசி |
| 06 | வரக்கா நாடு | - | பல்லடம், பொல்லாச்சி |
| 07 | ஆவின்குடி நாடு | - | பழனி, உடுமலைப்பேட்டை |
| 08 | மணநாடு | - | கரூர், தென்மேற்கு |
| 09 | தலையூர் நாடு | - | கரூர் தெற்கு, மேற்கு |
| 10 | தட்டயூர் நாடு | - | குளித்தலை |

# அனைத்து குல தெய்வங்களின்
# கமல பாதங்களுக்கும்
# இந்நூல்
# சமர்ப்பணம்

## அகில இலங்கை கொங்கு வேளாளர் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அமைப்புக்கள்

☆ கொங்கு வேளாளர் சங்கம் – பண்டாரவளை
☆ கொங்கு வேளாளர் மன்றம் – ஹட்டன்
☆ கொங்கு வேளாளர் சங்கம் – கொழும்பு

**வெளியீடு**
**09-02-2020**



## சடங்கு முறை பொதுவாக்கல் தொகுப்பு நூலுக்குத் தூண்களாக அமைந்தவை

1. **கொங்கு வேளாளர் வரலாறு**
   (திருத்தப்பட்ட 3ம் 11ம் பதிப்புக்கள்) தூரன் நல். நடராசன்
2. **கொங்கு வேளாளக் கவுண்டர்களின் வரலாறும் பண்பாடும்**
   கவியருவி. தே. ப. சின்னசாமி கவுண்டர் - **M.A., M.Ed.**
3. **தமிழர் திருமண நடைமுறைகள்**
   பேராசிரியர் அ. சண்முகதாஸ் - **PL.D**
   திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் - **M.A**
4. **கொங்கு வேளாள கவுண்டர்களின் வீர வரலாறு**
   மாஸ்டர் கே.எஸ்.மோகனசுந்தரம்
5. **கொங்கு நாட்டு வரலாறு**
   கோவை கிழார் - கோ.ம. இராமச்சந்திரன்
6. **வள்ளியறச்சல் காணியாளர்கள் வரலாறு**
   புலவர் செ.இராசு **M.A., Phd**
7. **ஆன்மீக மலர்**
   S. செல்லத்துரை - (ஸ்ரீ கவுண்டச்சி அம்மன் )
8. **சஞ்சிகைகள்**

   **கொங்கு வேளாளம்**
   பண்டாரவளை கொங்கு வேளாளர் சங்க வெளியீடு

   **இளந்தளிர்**
   ஹட்டன் கொங்கு வேளாளர் மன்ற வெளியீடு.

   **கொங்கு தமிழர் வாழ்வியல்** - மணவிழா மலர்
   P. அத்தப்பன் BE

   **கொங்கு வேளாளர் திருமணச் சடங்குகள்** - மணவிழா மலர்
   M. பாலசுப்ரமணியம் MA , B. சாந்தி மணியன்